மாலை: 51 மணி: 11 நவம்பர் 2009 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



# திருத்தணிகை
# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# 9 நிலை இராஜகோபுர கால்கோள் விழா

## மற்றும் பல்வேறு திருப்பணிகள் துவக்க விழா!

பேரன்புடையீர், வணக்கம்.

"குன்று தோறாடல்" என நக்கீரரால் போற்றப்படும்... தமிழ்க் கடவுளாம்திருமுருகன்
எழுந்தருள் புரியும் அறுபடை வீடுகளில்ஐந்தாம்படை வீடாக திகழும்
திருத்தணிகைஅருள்மிகு சுப்ரமணியசுவாமி
திருக்கோயில்இராஜகோபுரம் நிர்மாணிக்க வேண்டும்
என்கிற பக்தர்களின் நீண்டகாலஅவாவினை நிறைவு செய்யும் வகையில்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2040
கார்த்திகை திங்கள் 2ம் தேதி (18.11.2009) புதன்கிழமை காலை 9.00 மணி அளவில்
9 நிலை இராஜகோபுர கால்கோள் விழா மற்றும் பல்வேறு திருப்பணிகள்
துவக்க விழா நடைபெற உள்ளது.

மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை இணை அமைச்சர்

**திரு. டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன்**

அவர்கள் இவ்விழாவிற்கு தலைமையேற்கவும்
மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்

**திரு.கே.ஆர்.பெரியகருப்பன்**

அவர்கள் 9 நிலை இராஜகோபுரம் கால்கோள் விழாவை துவக்கி வைத்து
பல்வேறு திருப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி விழா பேருரையாற்ற
அன்புடன் இசைந்துள்ளார்கள். மற்றும்

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு.கே.பி.பி.சாமி அவர்கள்

தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர்
திரு. க.முத்துசாமி இ.ஆ.ப., அவர்கள்

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர்
திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப., அவர்கள்

முன்னிலை வகிக்கவும்

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித்துறை அமைப்பின்
பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும்
ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்து கொண்டு
சிறப்பிக்கவும் உள்ளார்கள்.

அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு முருகன் அருள்பெற
அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

அ.தி.பரஞ்ஜோதி எம்.காம்.பி.எல்
இணை ஆணையர்/செயல் அலுவலர்
(கூடுதல் பொறுப்பு)

மு.ஈஸ்வரப்பன்
தலைவர், அறங்காவலர் குழு.

அறங்காவலர்கள்

க.பாலகிருஷ்ணன் - அ.வெ.சக்கரப்பன்
கா.உஷாரவி மு.நாகன்



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 கார்த்திகை மாதம்
மாலை 51. மணி 11 நவம்பர் 2009

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!
வணக்கம்.

தில்லையைத் தரிசிப்பதால் முக்தி, காசியில் இறப்பதால் முக்தி, திருவாரூரில் பிறப்பதால் முக்தி என்றும் நினைத்தாலே முக்தி என்றும் போற்றப்படும் திருவண்ணாமலையில் 'திருக்கார்த்திகை தீபத்தினை' இக்கார்த்திகைத் திங்களில் கண்டு தரிசிக்க உள்ளோம்.

'ஆடிப்பாடி அண்ணாமலையானைத் தொழ ஓடிப்போகும் தீவினைகள்' எனும் நம் முன்னோர்கள் கண்ட அனுபவத்தினை எல்லாம் வல்ல பரம்பொருளாம் சிவபெருமான் அக்னி எனும் ஜோதி நிலையில் மலைவடிவாய் அருள்புரியும் திருவண்ணாமலைத் திருத்தலத்தில் தீப தரிசனத்தைக் கண்டு அவன் திருவடி தொழுது போற்றிக்கொண்டாட வாசகப்பெருமக்கள் அனைவரையும் வரவேற்கின்றேன்.

மனிதர்களுக்குள் உள்ள மும்மல இருளைப் போக்கவல்ல வெளிச்சமே ஆண்டவனாகிய பேரொளிப் பிழம்பு எனும் கருத்தை விளக்குவதற்கென்றே எழுந்த ஆன்மிகக் குறியீடுதான் கார்த்திகை தீப வழிபாடு என்றும், பிறவியாகிய கடலைக்கடந்து முக்தியாம் கரைசேர விரும்புபவர்கள் கலக்கத்தைப் போக்கிட உதவும் ஆன்மிகக் கலங்கரை விளக்கம் திருவண்ணாமலை என்றும், கற்பனை களஞ்சியம் சிவப்பிரகாசரின் சோண சைல மாலையின் கருத்துக்களைத் தொகுத்து 'காசினி போற்றும் கார்த்திகை தீபம்' எனும் தலைப்பில் சிந்தைக்கினிய சிறந்ததொரு கட்டுரையை இவ்விதழில் வழங்கியுள்ளார் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள்.

நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள திருவாய்மொழியினை முழுவதும் கற்று அனுபவிக்க ஒரு பிறவி போதாது. இருப்பினும் சில பாசுரங்களை முக்கியமாக கோயில் திருமொழிப் பாசுரங்களிலிருந்து சிலவற்றை மட்டும் கொண்டு எம்பெருமானைக் காணவேண்டும் எனும் ஆழ்வாரின் அவா, எவ்வாறு பூர்த்தி அடைந்தது என்பதை 'கண்டேன் கமல மலர்ப் பாதம்' எனும் தலைப்பில் தொடராக வழங்கியுள்ளார் முனைவர் திரு. டி.எஸ். ராமஸ்வாமி அவர்கள்.

அருட்கடலான ஆளுடைய பிள்ளையாரும், அன்புக்கடலான ஆளுடைய அரசரும், கருணைக்கடலான சிவபெருமானின் அருட்பார்வையை சம அளவிலேயே பெற்று நிறைவான வாழ்க்கை வாழ்ந்த சமகால அருளாளர்கள் என ஒப்புநோக்கி சிந்தைக்கினிய கருத்துக்களை சிறப்பாக வழங்கியுள்ளார் சேத்துப்பட்டு சித்தாந்த ரத்தினம் திரு. எம்.ஆர். சந்தானம் அவர்கள்.

ஏழை மக்களின் பசிப்போக்கிட சாதி சமயங்களை விடுத்து ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற கொள்கைக்காகவே தோன்றி அதன் வெற்றிக்காக பாடுபட்டு ஜோதி சொரூபியாக திகழும் வடலூர் வள்ளல் பெருமானின் மாண்புகளை சித்து நிகழ்த்தாத சித்தர் எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் மன்னார்குடி க. சுகுமாரன் அவர்கள்.


திருமழிசை ஆழ்வாரால் பாடப்பெற்றதும் கஜேந்திர மோட்சத் தலமாகவும் திகழும் கபிஸ்தலத்தின் சிறப்புகளும், மூதாதையர்களின் ஆன்மா சாந்தி அடைய விரும்புவோர் தரிசிக்க வேண்டிய தலமாகத் திகழும் திருமெய்ஞானத் திருத்தல மாண்புகளும் நவகோள்களில் ஒன்றான கேதுவின் தலமான அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் சிறப்புகளும், துன்பமில்லா இன்பப் பெருவாழ்வை வழங்குபவராகத் திகழும் அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அய்யர்மலை எனப்போற்றப்படும் சிவாயம் திருத்தலச்சிறப்புகளும் இவ்விதழில் திருத்தல உலாக்களாக வெளிவந்துள்ளன.

இதழினைப் படித்து இன்புறுவதோடு வாசகப்பெருமக்கள் தங்களது நல் ஆதரவினை தொடர்ந்து நல்கிட அன்புடன் வேண்டுகிறேன்.

ப.ரா. சம்பத்

இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்



# துறவியம்

"துறவற வாழ்வு மேற்கொள்ள முடிவு செய்துவிட்டேன். அதற்குத் தாங்கள் எனக்கு வழங்கும் அறிவுரை என்னவோ?"

நடுத்தரமான வயதும்–நல்ல உடற்கட்டும்–விழிகளில் மங்காத ஒளியும் கொண்ட ஒருவன் வள்ளுவரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டவாறு தலை வணங்கி நின்றான்.

"முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலைக்கு உரியவர். துறந்தவரைப்போல நடிப்போரை நான் துறவி என அழைக்கமாட்டேன். நடை, உடை, பாவனைகளால் தங்களை துறவியெனக் காட்டிக்கொண்டு மக்களை ஏமாற்றுவோர் பெருகி வருகிறார்கள். அவர்களை நான் வெறுக்கிறேன். அவர்களிடம் அறிவைப் பறிகொடுக்கும் மக்களைக் கண்டு இரக்கம் கொள்கிறேன். துறவு என்பது வேடத்தில் இல்லை. முதலில் அதற்கு உள்ளம், பக்குவப்பட வேண்டும்."

வள்ளுவர், துறவுபற்றித் தான் கொண்டுள்ள கருத்தைக் கோடிட்டுக் காட்டினார்.

"அதனால்தான் தங்களை நாடி வந்தேன். என் உள்ளம் பக்குவமடைய உற்றது கூறுவீராக."

வள்ளுவர், மென்சிரிப்பொன்றைத் தவழவிட்டவாறு அவனைப் பார்த்துச் சொன்னார்:

"பற்றுக்களைப் பற்றிக்கொண்டு விடாதே! அப்படிப் பற்றிக்கொண்டால் துன்பங்களும் உன்னை விடாமல் பற்றிக்கொள்ளும்."

இதைக் கூறிவிட்டு இந்தக் கருத்துச் செழித்துக் குலுங்கும் குறளையும் பாடிக்காட்டினார்:

"பற்றி விடாஅ இடும்பைகள்
பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு."

குறளைக் கேட்டதும் வந்தவன், வள்ளுவப் பெருமகனாரை வணங்கி,

"பெரியீர்! இந்தக் குறள்மொழி போதும் என் துறவு நெறி காப்பதற்கு! விடையருள்க!" என்றான். "பற்றுக்களை அறவே விட்டு விடுவேன்" எனச் சூளுரைத்துக் கிளம்பிய அந்தப் புதுத் துறவியின் செவியில் வள்ளுவர் குரல் விழுந்தது. என்ன குரல் அது!

"பற்றுக!"

என்பதுதான் அந்தக் குரல்! அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். "இப்போதுதானே


'பற்றினை விடுக' என்றுரைத்தார்! அதற்குள் 'பற்றுக' என்கிறாரே: இஃதென்ன முரண்பாடு?" என்று திகைத்து நின்றான்.

"பற்றுக்களை விட்டொழிப்பதற்கு ஒரு பற்றைப் பற்ற வேண்டும். அதுவே துறவுக்குரிய இலக்கணம்."

வள்ளுவர் விளக்கினார். வந்தவனுக்குப் புரியவில்லை! எந்தப் பற்றும் கூடாது என்கிறபோது ஒரு பற்று மட்டும் எங்கிருந்து வந்தது? அவனே வினாக்குறியானான்.

"எதிலும் பற்றில்லாதவராக யார் இருக்கிறாரோ அவரிடம் மட்டும் பற்றுக் கொள்ள வேண்டும். உன் பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அத்தகையோரிடம் நீ கொள்ளும் பற்றுத்தான் துணை நிற்கும்."

குறளையும் பாடிக் காட்டினார் வள்ளுவப் பெருந்தகை:



"பற்றுக பற்றற்றான் பற்றினைஅப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

பற்று விடுதல்– பற்றினைக் கொள்ளுதல்– இரண்டுக்கும் கிடைத்த விளக்கமென்னும் ஒளி கொண்ட துறவற வாழ்க்கையில் சிறந்து விளங்கினான் வள்ளுவரைக் காண வந்தவன்.

அதிகாரம்: *35* துறவு பாடல்கள்: *347,350*

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே..


| | | | |
|---|---|---|---|
| 1. | காசினி போற்றும் கார்த்திகை தீபம் | தமிழாகரர் தெ.முருகசாமி | 6 |
| 2. | கண்டேன் கமல மலர்ப்பாதம் | முனைவர்.டி.எஸ்.ராமஸ்வாமி | 9 |
| 3. | ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசரும் | சிந்தாந்த இரத்தினம் டாக்டர்.எம்.ஆர்.சந்தானம் | 13 |
| 4. | கார்த்திகையில் அரன்அருள் பெற்ற நாயன்மார்கள் | | 17 |
| 5. | நல்வாழ்வு அருளும் நாலூர் மயானம் | பனையபுரம் அதியமான் | 22 |
| 6. | ஓரே பாசுரம் பெற்ற திருக்கவித்தலம் | பாச்சுடர் வளவதுரையன் | 25 |
| 7. | சித்துநிகழ்த்தாத சித்தர் | மன்னார்குடி க.சுகுமாரன் | 27 |
| 8. | உலகம் உய்ய உதித்த உடையவர் | பெ.ராமநாதபிள்ளை | 29 |
| 9. | சாவித்திரி | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் | 32 |
| 10. | கீழப்பெரும்பள்ளம் ஸ்ரீ கேது ஸ்தலம் | | 35 |
| 11. | அய்யர்மலை எனப்படும் சிவாயம் | | 37 |


அருள்மிகு அருணாசலேசுவரர்
அருள்மிகு உண்ணாமுலையம்மை

# அருள்மிகு சிவபெருமான் 108 போற்றிகள்

1. ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி
2. ஓம் அடியவர்க் காரமுது ஆனாய் போற்றி
3. ஓம் அண்டத்துக்கு அப்பாலாய் நின்றாய் போற்றி
4. ஓம் அதிபதியே ஆர்அமுதே ஆதி போற்றி
5. ஓம் அந்தியாய் நின்ற அரனே போற்றி
6. ஓம் அமரர் பதியாள வைத்தாய் போற்றி
7. ஓம் அருமையில் எளிய அழகே போற்றி
8. ஓம் அருந்தவர்கள் தொழுதுஏத்தும் அப்பா போற்றி
9. ஓம் அனல்அங்கை ஏந்திய ஆதீ போற்றி
10. ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி
11. ஓம் ஆலமர நீழலில் அமர்ந்தாய் போற்றி
12. ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதி போற்றி
13. ஓம் ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
14. ஓம் இடர்கடி கணபதிவர அருளினை போற்றி
15. ஓம் இரவிடை ஒள்எரி ஆடினாய் போற்றி
16. ஓம் ஈண்டுஒளி சேர்கங்கைச் சடையாய் போற்றி
17. ஓம் உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி
18. ஓம் உடலே உயிரே உணர்வே போற்றி
19. ஓம் உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
20. ஓம் உள்ஒளி வீசும் ஒருவ போற்றி
21. ஓம் ஊரும் அரவம் உடையாய் போற்றி
22. ஓம் ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
23. ஓம் ஊன்உடைப் பிறவியை ஒழிப்பாய் போற்றி
24. ஓம் எண்ணரிய திருநாமம் உடையாய் போற்றி
25. ஓம் எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
26. ஓம் எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
27. ஓம் எரியும் மழுவாள் படையாய் போற்றி
28. ஓம் எல்லாம் சிவன்என நின்றாய் போற்றி
29. ஓம் ஏத்தாதார் மனத்து அகத்து இருளே போற்றி
30. ஓம் ஏழ்உலகும் ஏழ்மலையும் ஆனாய் போற்றி
31. ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி
32. ஓம் ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
33. ஓம் ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
34. ஓம் கங்கையைச் சடையில் கரந்தாய் போற்றி
35. ஓம் கண்ணாய் உலகுஎலாம் காத்தாய் போற்றி
36. ஓம் கம்பமா கரிஉரித்த கபாலி போற்றி
37. ஓம் கலைமான் மறிஏந்தும் கையா போற்றி
38. ஓம் கழல்அடைந்தார் செல்லும் கதியே போற்றி
39. ஓம் கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
40. ஓம் கற்றுஅறிந்த கலைஞானம் ஆனாய் போற்றி
41. ஓம் காப்புஅரிய ஐம்புலனும் காத்தாய் போற்றி
42. ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி
43. ஓம் காவாய் கனகக் குன்றே போற்றி
44. ஓம் குழைக்கும் பயிர்க்குஓர் புயலே போற்றி
45. ஓம் குறைஉடை யார்குறை தீர்ப்பாய் போற்றி
46. ஓம் கொங்குஅலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
47. ஓம் சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
48. சிவலோக நெறிதந்த சிவனே போற்றி
49. ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி
50. ஓம் சுடர்ஒளியாய் விளங்கும் சோதி போற்றி
51. ஓம் சுண்ணவெண் ணீறு துதைந்தாய் போற்றி
52. ஓம் செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
53. ஓம் செந்துவர் வாய்உமை பங்கா போற்றி
54. ஓம் செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
55. ஓம் செல்வாய செல்வம் தருவாய் போற்றி
56. ஓம் செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி
57. ஓம் சேவின் மேல்வரு செல்வா போற்றி
58. ஓம் ஞாயிறாய் மதியமாய் நின்றாய் போற்றி
59. ஓம் தக்கன் செய் பெருவேள்வி தகர்த்தாய் போற்றி
60. ஓம் தன்ஒப்பு அறியாத் தழலாய் போற்றி
61. ஓம் தீராநோய் தீர்த்து அருள வல்லாய் போற்றி
62. ஓம் தூநீறு சேர்ந்துஇலங்கும் தோளா போற்றி
63. ஓம் தென்னாடு உடைய சிவனே போற்றி
64. ஓம் நஞ்சுஒடுங்கும் கண்டத்து நாதா போற்றி
65. ஓம் நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி
66. ஓம் நான்மறையோடு ஆறுஅங்கம் ஆனாய் போற்றி
67. ஓம் நால்திசைக்கும் விளக்காய நாதா போற்றி
68. ஓம் நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
69. ஓம் நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
70. ஓம் நோக்குஅரிய திருமேனி உடையாய் போற்றி
71. ஓம் பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
72. ஓம் பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி
73. ஓம் பண்துலங்கப் பாடல் பயின்றாய் போற்றி
74. ஓம் பலரும் பரவப் படுவாய் போற்றி
75. ஓம் பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
76. ஓம் பற்றி உலகை விடாதாய் போற்றி
77. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
78. ஓம் பாட்டுஅகத்து இசையாகி நின்றாய் போற்றி
79. ஓம் பாரோர் விண்ஏத்தப் பாடுவாய் போற்றி
80. ஓம் பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
81. ஓம் பிரமன்தன் சிரம்அரிந்த பெரியோய் போற்றி
82. ஓம் பிறவி அறுக்கும் பிரானே போற்றி
83. ஓம் பிறைஅணி செஞ்சடை பிஞ்ஞகா போற்றி
84. ஓம் புற்று அரவக் கச்சுஆர்த்த புனிதா போற்றி
85. ஓம் பூத நாதனே புண்ணியா போற்றி
86. ஓம் பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
87. ஓம் பெரியாய் சிறியாய் பிறையாய் போற்றி
88. ஓம் பேர்ஆ யிரம்உடைப் பெம்மான் போற்றி
89. ஓம் பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
90. ஓம் மந்திரமும் மறைப்பொருளம் ஆனாய் போற்றி
91. ஓம் மயில்ஊர்தி முருகவேள் தாதை போற்றி
92. ஓம் மருந்து அமரர்க்கு அருள்புரிந்த மைந்தா போற்றி
93. ஓம் மறைஉடைய வேதம் விரித்தாய் போற்றி
94. ஓம் மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் போற்றி
95. ஓம் மன்னிய திருவின் மலையே போற்றி
96. ஓம் மிக்கோர்கள் ஏத்தும் விளக்கே போற்றி
97. ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முன்னவா போற்றி
98. ஓம் முன்னே தோன்றி முளைத்தாய் போற்றி
99. ஓம் மூவா நான்மறை முதல்வா போற்றி
100. ஓம் மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
101. ஓம் மூவுலகும் தான்ஆய முதல்வா போற்றி
102. ஓம் மெய்சேரப் பால்வெண்நீறு ஆடீ போற்றி
103. ஓம் மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
104. ஓம் வண்ணம் ஆயிரம் உடையாய் போற்றி
105. ஓம் வானோர்க்கு அருளிய மருந்தே போற்றி
106. ஓம் வானோர் வணங்கப் படுவாய் போற்றி
107. ஓம் வெள்ளிக் குன்றன்ன விடையாய் போற்றி
108. ஓம் வேத விழுப்பொருளே போற்றி போற்றி

# காசினி போற்றும் கார்த்திகை தீபம்

ஐம்பெரும் பூதங்களுள் நெருப்பு ஒன்று. நெருப்பால் விளையும் பலன்கள் பலவாயினும் அவற்றுள் அது தரும் வெளிச்சம் இன்றியமையாததாகும். இவ்வெளிச்சம் புறஇருட்டைப் போக்குவது. இருள் விலகினால் தான் பொருளின் இருப்பு தெரியும். புற இருளும் அதனை விலக்கும் வெளிச்சமும் நமது ஊனக் கண்ணுக்குத் தெரிவது போலத் தெரியாத இருளும் வெளிச்சமும் உள்ளதை ஞானத் தேடலால் உணர வைப்பதே ஆன்மிகமாகும். அந்த ஆன்மிகத்தின் வழி நோக்கினால் ஆண்டவனாகிய பேரொளி வெளிச்சத்தை அனுபவிக்க முடியும்.

புற இருளும் வெளிச்சமும் நிரந்தரமற்றவை. மாறி மாறி வருபவை. ஆனால், கண்ணுக்குத் தெரியாத இருளும் வெளிச்சமும் நிரந்தரமானவை. அந்த இருள்தான் மனிதர்களுக்குள் உள்ள மலஇருள். இம்மல இருளைப் போக்கவல்ல வெளிச்சமே இறைவன். இந்த இருட்டையும் வெளிச்சத்தையும் மணிவாசகர், "வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை" என்றும் "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே" என்றும் கூறினார்.

புறத்திருள்; வரும், போகும், அதை நீக்கிக் கொள்ள பல்வேறு வெளிச்சங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். ஆனால், அக இருளானது நீங்காது தங்கியிருக்க வல்லது. செம்பில் களிம்பு போல் துலக்கத் துலக்கப் போகாது. அதனைப் போக்கவல்ல வெளிச்சமே ஆண்டவனாகிய பேரொளிப் பிழம்பு. இக்கருத்தை விளக்குதற்காக எழுந்த ஆன்மிகக் குறியீடு தான் கார்த்திகை தீப வழிபாடு. இதைத் தான் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர்,

கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்து நின்று எழுந்து விளங்குறும் சோண
சைலனே! கைலை நாயகனே!

என்று சுட்டிக்காட்டுகிறார்.

மனிதர்க்குள்ள ஆணவமாகிய இருள்



அழிய வேண்டும். அது தானாக அழியாது. இன்னொருவரின் துணையால் அழிக்கப்பட வேண்டும். ஆணவமாகிய அக இருள் யான் என்ற ஒரு கிளையையும் எனது என்ற மற்றொரு கிளையையும் கொண்டு வளர்ந்த வயிரம் பாய்ந்த ஒரு மரம் போன்றதாகும். அம்மரத்தை வெட்டிச் சாய்த்து வேரோடு எடுத்து எறிய வல்லது கார்த்திகை விளக்கான கடவுள் என்கிறார் சிவப்பிரகாசர்.



வேறால் கிளைத்துக் கொண்டே போகும் மரத்தை வளர ஒட்டாமல் செய்ய வேண்டுமானால் அதன் வேரில் திராவக அமிலத்தை ஊற்றி அதன் உயிர்ப்பைச் சாக அடித்தல் போலக் கார்த்திகை விளக்காகிய ஆண்டவன் அகத்திருள் அனைத்தையும் வளர ஒட்டாமல் சாய்ப்பான் என்பது சிவப்பிரகாசரின் எதிர்பார்ப்பாகும். எனவே கார்த்திகை தீப விளக்கானது வீடுகளில் ஏற்றும் விளக்கைப் போன்றதன்று என்றும் தானாக எரியும் உலகப் பெருவிளக்கு என்றும் சிவப்பிரகாசர் மேலும் கூறுகிறார்.

அகவிளக்கென்ன அகல்திரி நெய்தீ
ஆக்குவோர் இன்றியே எழுந்த
சகவிளக்கு என்ன விளங்குறும் சோண
சைலனே! கைலை நாயகனே!

அகலில் திரியிட்டு நெய் விட்டு ஏற்றப்படுவது வீட்டு விளக்கு. அதனை ஏற்ற ஒருவர் தேவை. ஆனால், இப்படிப் பொருளையெல்லாம் ஒன்று சேர்த்தும் ஏற்றுவதற்கு ஒருவரின்றியும் தானாக ஒளிர்ந்தோங்கும் சக விளக்கே (சகம் – உலகம்) இறைவனாம் கார்த்திகை தீப விளக்கு என்பது சிவப்பிரகாசரின் கருத்தாகும்.

இக்கார்த்திகை தீப விளக்கு, வீடுகளிலும் எல்லா திருக்கோயில்களிலும் மலை முகடுகளிலும் ஏற்றினாலும் அதற்கான உரிய சிறப்பு திருவண்ணாமலைத் தலத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும். ஏனெனில், மலையே விளக்காக உள்ளதால் இம்மலை கார்த்திகையில் மட்டுமின்றி எல்லாக் காலங்களிலும் விளக்காக உள்ளதென்பது தனிச்சிறப்பாகும்.

கடலில் செல்லும் கப்பல் திசை மாறிப் போகாதவாறும் முறையாக் கரை சேரவும் பெரிதும் உதவுவது கலங்கரை விளக்கமாகும். இதுபோல் திருவண்ணாமலையானது ஆன்மீக உலகின் கலங்கரை விளக்காக உள்ளதாம். தவமாகிய படகைச் செலுத்திப் பிறவியாகிய கடலைக் கடந்து முக்தியாம் கரை சேர விரும்புகிறவர்களின் கலக்கத்தைப் போக்கிட உதவும் ஆன்மீகக் கலங்கரை விளக்காக உள்ளது திருவண்ணாமலை என்கிறார் சிவப்பிரகாசர்.

பவக் கடல் கடந்து முத்திஅம்
கரையில்
படர்பவர் திகைப்பு அற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும்
சோண
சைலனே! கைலை நாயகனே!

உவர்க் கடலைக் கடக்க மரக்கலம் தேவை. பிறவிக் கடல் கடக்கத் தவமாகிய பக்திக்கலம் தேவை. அப்பக்திக் கப்பலைச் செலுத்துபவர்கள் திசை மாறிப் போகாதவாறு திருவண்ணாமலையும் அதன் உச்சியில் எரியும் தீபமும் கலங்கரைப் பெருவிளக்காக உள்ளது என்ற உண்மையை இன்றைய நாளில் நாளும் திருவண்ணாமலையில் நடக்கும் கிரிவலப்

**தமிழாகரர் தெ.முருகசாமி**

பெருமையால் உணரலாம். ஏனைய எந்த மலைக்கும் நாளும் கிரிவலப் பெருமை இல்லை என்பதால் ''அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணா அறுமே" என்ற ஞானசம்பந்தரின் வாக்கு தெய்வவாக்கன்றோ!


ஆக, திருவண்ணாமலையே விளக்காக உள்ளதால் இவ்விளக்கு உலகில் ஏற்றப்படும் விளக்கிற்கு வேறு பட்டது என்கிறார் சிவப்பிரகாசர்.

"ஏற்றிடும் விளக்கின் வேறுபட்டு
அகத்தின்
இருளெல்லாம் தன்பெயர் ஒருகால்
சாற்றினும் ஒழிக்கும் விளக்கெனும்
சோண
சைலனே! கைலை நாயகனே!"

ஏற்றப்படும் விளக்கு புறத்தே தெரியும் இருட்டை ஒழித்தாலும் புறத்தே தெரியாத மன இருட்டைப் போக்காது. அதைப் போக்க வல்லது அண்ணாமலையான விளக்கு. அவ்விளக்கைச் சென்று தொழவில்லை யானாலும் அவரவரும் இருந்த இடத்தி லிருந்தே அண்ணாமலையாம் விளக்கை எண்ணி அரகர நாமம் சொல்லி மனம் உருகினாலே மனத்தில் உள்ள களங்கம் (இருள்) நீங்கும் என்பது கருத்து. அதனால் தான் இக்கார்த்திகை தீப அண்ணாமலையாம் விளக்கு, குடத்துள் விளக்கின்றிக் குன்றிட்ட விளக்கு போன்றதென்பதால் இதை உலக விளக்கு என்று சிவப்பிரகாசர் மீண்டும் ஒருமுறை கூறி வழிபடுகிறார். "சார் தரும் உலக விளக்கு" என்பது அவர் வாக்கு.

திருவண்ணாமலையே ஒளிப்பிழம்பாக இருப்பதைத் திருப்புகழ் வேந்தர் அருணகிரிநாதர், "சோதியெனலாவுதித்த





சோணகிரி மாமலை" என்கிறார். அதனால் தான் சிவபெருமான் அண்ணாமலையாக வடிவங் கொள்ளும்போது தனது அங்க அடையாளங்களையெல்லாம் மறைத்துக் கொண்டாலும் தனது இயல்பான செந்நிறத்தை மறைத்துக் கொள்ள முடியாததால் நூறாயிரம் கோடி செங்கதிர்களை வீசும் ஒளி மேனியனாகவே காட்சி தரச் செம்மலையாய் நிற்கின்றான் என்று சிவப்பிரகாசர் சோண சைல மாலை என்ற தனது நூலில் வருணிக்கின்றார்.

"கண்ணுறும் கவின்கூர் அவயவம்
கரந்தும்
கதிர்கள் நூறாயிரம் கோடித்
தண்நிறம் கரவாது உயர்ந்தெழும்
சோண
சைலனே! கைலை நாயகனே!"

நிறைவாக, நெருப்பு என்ற ஐம்பூதத்துள் ஒன்றான விளக்கிற்கு ஏனையவற்றிற்கில்லாத தனித்துவம் உண்டு என்பதை உணர்ந்தால் அதுவே காசினி போற்றும் கார்த்திகை தீபத்தின் தத்துவமாகக் கொள்ளலாம். ஒரு விளக்கு இன்னொரு விளக்கை ஏற்றும் என்பர். (ONE LAMP LIGHTS ANOTHER) இந்தப் பரிமாற்றம் ஐம்பூதத்துள் நெருப்புக்கு மட்டுமே உண்டு. ஈண்டு உணர்த்தும் பரிமாற்றம் என்பது அறிவுப் பரிமாற்றம், அன்புப் பரிமாற்றம், அருள் பரிமாற்றம் போன்ற எல்லாவற்றிற்குமான ஒரு குறியீடு என்பதால் தான் கார்த்திகை விளக்குகளைப் பலவாக வரிசைப்படுத்தி ஏற்றி வைத்துத் தமிழ் மக்கள் கடவுளாக வழிபட்டனர். எனவே, காசினி போற்றும் கார்த்திகை தீபத்தைத் தீப மங்கள சோதீ நமோ நம எனப் போற்றி வணங்குவோமாக!

# கண்டேன் கமலமலர்ப் பாதம்

முனைவர்
டி.எஸ்.ராமஸ்வாமி

எம்பெருமான் திருவருளாலேதான் எல்லாமே இயங்குகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

"மோக்ஷம் அடைய வேண்டும், மறுபிறவி கூடாது," என்கின்ற ஒரே ஆசையுடன், உலக விஷயங்களில் விரக்தி கொண்டு, இறைவன் திருவடிகளே கதி என்றே வாழ வேண்டும். இதுவும் தெரியும்.

ஆயினும், எண்ணிலடங்கா ஆசைகள் மண்டிக் கிடக்கின்றதால், ஏதோ கொஞ்சம் படித்தும் கேட்டும் அறிந்து கொண்டவற்றை, அல்லது அறிந்து கொண்டு விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் சிலவற்றை வெளியிட்டால் சிலராவது படித்துப் பயனடைவார்கள் என்று அடியேனுக்கு ஓர் நப்பாசை, அசட்டுக் கற்பனை; ஆகவே, அவைகளை எழுதத் துணிந்தேன்.

கடவுளைக் காண முதலில் வேண்டியது அவனிடம் அசைக்க முடியாத நம்பிக்கை.

திருவாய்மொழி என்கிற மகாசமுத்திரம் முழுவதுமாகக் கற்று அனுபவிக்க ஒரு பிறவி போதாது. இருப்பினும் சில பாசுரங்களை, முக்கியமாக கோயில் திருவாய்மொழிப் பாசுரங்களிலிருந்து சில அர்த்த விசேஷங்களைக் கொண்டு எம்பெருமானைக் காண வேண்டும் என்கிற ஆழ்வாரின் அவா எப்படி பூர்த்தி அடைந்தது என்பதை விளக்க முயல்கிறேன்.

என்னதான் எழுதினாலும், ஆழ்வார் நெஞ்சத்தை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் "ஆச்சார்ய ஹ்ருதயம்" மூலமாகப் படம் போட்டுக் காட்டியதைப் போல் காட்ட முடியுமா?

எப்படித்தான் எடுத்துச் சொன்னாலும் ஸ்ரீநம்பிள்ளையின் ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்யானத்தைப் போல்



அழகாகவும், ஆழமாகவும் சொல்ல முடியுமா?

முடியாது தான், இருந்தாலும், அடியேன் நண்பரைப் போன்றவர்கள் சிலர் இதனால் பயனடைவார்கள் என்று எண்ணி எழுதுகிறேன்.

முதல் பத்து – முதல் திருவாய்மொழி (1)

**உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்**
**மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்**
**அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்**
**துயரறு சுடரடி தொழுதெழென் மனனே**

என் மனமே!

தன் மனதுக்குத் தானே உபதேசம் செய்கிறார் ஆழ்வார்.

அறிவு சொல்படி கேட்டால் மனம் மேலே எழும் அறிவின் உரையைத் தள்ளினால் மனமும் கீழே விழும். அறிவுக்கும், மனதுக்கும் நடக்கும் இடைவிடாத போராட்டமே வாழ்க்கை.

எம்பெருமான் அருளால் பூரண ஞானம் பெற்ற ஆழ்வார் தன் மனதுக்கும் புத்தி சொல்ல வேண்டியுள்ளது. ஏனெனில், மனம் ஐம்புலன்களின் ஆட்சியில் ஆட்பட்டுத் திரியும் அசித்து; கண்டபடி அலைந்து திரியும்; கட்டுக்குள் அடங்காது; அதற்கு மிக அருகில் உள்ள அறிவு சொல்வதைக் கேட்காது, தன்னையும் ஏனையோரையும் அழிக்கும் வல்லமை படைத்தது.

மனம் என்பது ஒரு சிறிய அறை. அதில் குப்பைகளை, வேண்டாத விஷயங்களைத் திணித்தால், உள்ளே இருக்கும் நல்லவை வெளியே தள்ளப்படும்.

"மனமே மனிதர்களை உலகப் பாசத்தால் கட்டுப்படுத்துவதற்கும், உலகப் பாசத்திலிருந்து நீங்குவதற்கும் காரணமாக அமைந்தது."

– விஷ்ணு புராணம்.

ஆகவேதான், என் மனமே! என்று தன் நெஞ்சிடம் பேசி பிரார்த்தனை செய்யும்படி வேண்டிக் கொள்கிறார். இந்த வேண்டுதலுடன் ஆரம்பித்து, திருவாய்மொழி என்னும் இந்த பக்திப் பிரபந்தத்தை நமக்காக அருளிச் செய்து நம்மை உய்விக்கிறார்.

"என்" மனமே என்கிறார்.

மற்றவர்களுக்கு உபதேசம் செய்பவர்கள், முதலில் தன் மனதைத் தூய்மைப்படுத்துதல் வேண்டும் என்பது நியதி. மற்றவர் கண்ணில் இருக்கும் தூசியைத் துடைப்பதற்கு முன் என் கண்களில் இருக்கும் பெரிய தூலத்தை எறிதல் வேண்டும் என்பதே அடிப்படை விதியாகும். 'நான் தூய்மை அடைவேனாக" என்று தனக்குத்தானே சொல்லித் திருத்திப் பின்னரே மற்றவருக்கு தைரியமாக உபதேசம் செய்ய முடியும். இல்லையானால் அந்தப் பேச்சு ஊருக்கு உபதேசிக்கும் வேஷதாரியின் பேச்சாகும்.

தொழுது எழு!

மனம் தொழ வேண்டும். இறைவனிடம் இரு கைகளையும் குவித்து விட்டு, அவனை வணங்கினேன் என்று கூறலாமா? மனதாரப் பிரார்த்தித்தால், கை, கால்கள் முதலிய கர்மேந்திரியங்களும், கண் முதலிய ஞானேந்திரியங்களும் தானாகவே அவனிடம் செல்லும். "தொழுது" என்றாலே மனதார வணங்குவது என்றுதான் பொருள்.

"அஞ்சலி வைபவம்" – நூலில் இதை ஸ்ரீவேதாந்த தேசிகர் மிக அழகாக விளக்கு கிறார். "தூயோமாய் வந்தோம் தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க...." என்று ஸ்ரீ ஆண்டாள் 'மனத்தி னால் சிந்திக்க' என்பதை அழுத்தந் திருத்தமாக கூறுகிறார்.

ஆகவேதான், "மனமே, தொழு" என்கிறார். தொழுது 'எழு' என்பது தொழுதுப் பின் மனம் எழும்; அதாவது (பற்பல துன்பங் களால்) வீழ்ச்சியடைந்த மனம், அந்த வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு எழும்.

''மனமே! அதோ கதி அடைவதைத் தவிர்த்து உயர்கதி அடைந்திடு– உஜ்ஜீவித்துப்போ" –காஞ்சி ஸ்வாமி.

"எழுவாய் மனமே" என்கிறார் ஆழ்வார்.

அதாவது, மனம் என்பதே எழுவாய் "பயனல்ல செய்து, பயனில்லை நெஞ்சே" என்பது பயனிலை.

'ஒழுவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வோம்'' என்று செயப்படுபொருள்; செயல்பாடு.

ஆக, மனமே, இறைவனை நெஞ்சிலே இறுகப் பற்றிக் கொண்டு மேலே மேலே எழுவாயாக'' என்று ஆழ்வார் உபதேசிக்கிறார்.

சுடரடி தொழுது எழு!

'திருவடி தொழுகை' என்பது வைணவர்களுக்கு நன்றாகத் தெரிந்த வழிபாடு.

எம்பெருமானின் முழு உருவத்தையும் சேவிக்கும் நாம், மனதில் அவனை முழுமையாகப் பற்றி வணங்க, அவன் திருவடிகளே சரணம் என்ற கொள்கையில் உறுதி உடையவர்களாதலால் அவன் திருப்பாதங்களையே தொழுகிறோம்.

அவன் திருவடிகளை ஏன் சுடர் – ஒளி பொருந்திய அடிகள் என்கிறார்?

உயர்ந்த கல்யாண குணங்களுக்கும், ஞான பூர்த்திக்கும், முழுமையான ஆனந்தத்திற்கும் உறைவிடமான இறைவன் திருவடிகள் ஒளி பொருந்தித் தானே இருக்கும்? அல்லாமல், உலகம் தோன்றியது முதல், எத்தனையோ பக்தர்கள் அவன் ஒளிமிக்க திருவடியில் சரணடைந்து, "உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று திருவடிகளில் புகுந்து மேலும், மேலும் ஒளி பெற செய்ததால், அவை 'சுடர் அடிகள் ஆயின.

எம்பெருமான் திருவடிகள் எல்லா உயிர்களின் எல்லாத் துன்பங்களையும் போக்குவதாலே அருள் புரிதலை தம் இயல்பாகச் செய்யும் திருவடிகள். ஆகவேதான், அவை 'துயரறு சுடரடிகள்'.

<u>துயர் அறு சுடரடி தொழுது எழு</u>

இராமானுஜர் (எம்பெருமானார்) கருத்து:

"ஸ்ரீராமன், நாட்டில் வாழும் மக்கள் துன்பப்படும்போது, தானும் துன்பம் அடைந்தான் என்று ஸ்ரீஇராமாயணம் கூறுகிறது. மக்கள் இன்புறும்போது, தானும் இன்புறுகிறான். அதுபோல், உயிர்கள் துயரம் தீர தானும் துயர் நீக்கினான். ஆழ்வார் மயர்வு அற, இறைவன் துயர் அற்றான்" என்கிறார். அதாவது பக்தர்களின் துக்கம் நீங்குதலை, தன் துக்கம் நீக்கியதாகக் கருதுபவன் இறைவன்.

ஒவ்வொரு அடியவனும் விரும்புவது, எல்லையற்ற ஒளி உருவமான திவ்ய மங்கள விக்கிரகமான இறைவனின் திருவடிகளை.

பால் குடிக்கும்போது குழந்தை, தன் தாயின் மார்பிலே வாய் வைப்பது போல், ஆழ்வாரும் "உன் தேனே மலரும் திருப்பாதம் (1–5–5) என்கிற திருவடிகளையே கூறுவதை நினைவில் கொள்வோம்.

ஆழ்வார், உலகச் சிறப்பு மறையான திருவாய்மொழியில் பல பாசுரங்களில் திருவடிகளின் மேன்மையை அறிவுறுத்துகிறார்.

உயிரின் தன்மைக்கு ஏற்ற தொழில் இறைவனை வணங்குதல். ஆனால், நித்திய சம்சாரிகளாகிய நமக்கு இறைவன் நினைவும் போய் அவனை வணங்க வேண்டிய கடமையும் மறந்து, உண்டியே, உடையே உகந்து செல்லும் இயந்திரங்களாக மாறி அலைந்து திரிவதே முழு நேர வேலையாகக் கொண்டுள்ளோமே!

ஆகவேதான், ஆழ்வார் இறைவன் திருவடிகளைத் தொழுது எழு என்கிறார்.

"கடவுளை உள்ளபடி அறிதல் என்பது இல்லையானால், அவன் இல்லாதவன் ஆகிறான்" என்னும் நிலை கழிந்து, "கடவுளை உள்ளபடி அறிதல் என்பது உண்டானால் அவன் உள்ளவன் ஆகிறான்," என்கிறவர்கள் கூட்டத்தில் ஒருவனாக நல்ல பாதையில் செல்ல முயற்சி செய்" (தைத்ரிய உபநிஷத்)

'அடியிலே (முன்பு) தொழாமையால் வந்த குறைவு நீங்கும்படி அடியிலே (திருவடிகளை) தொழுது பிழைப்பாயாக' என்கிறார்.

'துயர் அறு' என்பது இங்கே பிறவிப் பெரும் துயர் என்பதே. அதாவது இறைவனிடமிருந்து வந்த இந்த உயிர் பிறவிக் கடலைக் கடந்து மீண்டும் இறைவனைச் சேர ஏங்குகிறது, துன்பப்படுகிறது, துயர் கொள்கிறது, துடிக்கின்றது. அதுபோன்றே, தன் குழந்தையாகிற உயிர் தன்னிடமிருந்து பிரிந்து சென்று, சம்சார வாழ்க்கையில் உழன்று, தன்னையும், இறைவனையும் மறந்து, மறந்து விட்டோம் என்ற ஏக்கமும் இல்லாமல், 'தேகமே ஆத்மா' என்று ஐம்புல ஆசாபாசங்களுக்கு அடிமையாக கிடந்து உழல்கின்றதே, அந்தச் சூழலிலிருந்து விடுபட்டு என்னிடம் வந்து சேராதா என்று இறைவனும் ஏங்குகிறான். ஆக, இருவர் துயரமும் தீர "என் மனமே, அவன் அருளைப் பெற, அவன் திருவடிகளைத் தொழுது, எழுவாயாக" என்கிறார். "மாயோயே, மாயோயே, மறுபிறவி அறுக்கும் மாயோயே" –பரிபாடல்.

ஆழ்வார் 'துயர் போக' என்றோ, 'துயர் நீங்குக' என்றோ சொல்லாமல் 'துயர் அறு' என்பதால் உயிரின் மிக உயர்ந்த இலட்சியமாக மறுபிறவி என்னும் விதியை 'அறுத்தல்' வேண்டும்.

மீண்டும் இறைவன் என்ற அந்த எசமானிடம் போய்ச் சேர வேண்டும். Salvation or Reconnection with Source என்பர். சராசரி மனிதன் சம்சார வாழ்வில் ஆசாபாசங்களி னால் ஏற்படும் துன்பங்கள் நீங்க இறைவனை வேண்டுகிறான். ஆனால், மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார், "கூவிக் கொள்ளும் காலம் இன்று குறுகாதோ?" என்று ஏங்கி, "என் அவா அறச் சூழ்ந்தாயே" என்று முடிப் பதனால், எம்பெருமானை அடைய வில்லையே என்ற ஒரே துயர் ஆழ்வாருக்கு.

அந்தத் துயர் அறுக்க, அவன் திருவடிகளைத் தொழுது எழு என்கிறார்.

அவன் திருவடிகளை என் மனம் தொழ, அவன் தகுதி என்னவோ? அவன் என்ன அவ்வளவு உயர்ந்தவனா?

**அவன்:**

முதலில், இறைவனை மரியாதைக்கும், அச்சத்திற்கும் உரிய 'அவர்' என்னாமல், அன்புக்கும், ஆசைக்கும் உட்பட்ட நெருங்கிய, உற்ற, தோழனாகக் கருதி 'அவன்' என்னும்படி நம்மைச் சொல்ல வைக்கிறாரே ஆழ்வார், அதற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். இராமபிரான் குகப் பெருமானைத் தன் தம்பிக்கும், மனைவிக்கும் தனக்கும் நெருக்கம் உண்டாக்கியதுபோல், ஆழ்வார், பகவானை 'அவன்' என்று சொல்லி, நமக்கும் பகவானுக்கும் பிரியா இணைப்பை, நெருக்கத்தை முதலில் ஏற்படுத்தி அருள்கிறார்.

**உயர்வற உயர்நலம் உடையவன்**

ஆனால், இறைவனை 'அவன்' என்று சொல்லி நமக்கு அடையாளம் காட்டியதால், ஏதோ அவனும், நாமும் ஒரே சமமான நிலையில் உள்ளோம் என்று ஆகுமோ? அவன் கல்யாண குணங்கள் எனும் நற்குண்ங்கள் முழுமையாக உடையவன், இதைவிட பூர்ணமான, இதற்கு மிஞ்சிய நல்ல குணங்கள் யாருக்குமே இருக்க முடியாது என்ற அளவிற்கு, அவன் குணநலன்கள் அமைந்துள்ளன.

அவன் குணங்கள் அற்றவன், (நிர்க்குணன்) அல்லன் என்பதை முதலிலேயே தெளிவாக, அழுத்தந்திருத்தமாகக் கூறி நம் வேதாந்த சித்தாந்தத்தை நிலைப்படுத்துகிறார்.

இறைவன் குணங்கள் இல்லாதவன் எனும் மற்ற மத நம்பிக்கைகளை ஆழ்வார் முதலிலேயே மறுக்கிறார். அவன் திருக்குணங்களையும் அவன் திருமேனியையும் அனுபவித்து, பொழுது போக்கி, இன்பம் காண்பதே வைணவர்களின் சாரமான வாழ்வு. அந்த ஆதாரத்தை உறுதியுடன் ஆழ்வார் முதலிலேயே நிலை நிறுத்துகிறார்.

அவன் குண வெள்ளத்திற்கு எதிரே அடியேன் அகங்காரத்துடன் மரம் போல் நிமிர்ந்து நின்றால் அழிந்து விடுவேன்; கொடிபோல் வளைந்து 'நீசனேன், நிறைவு ஒன்றும் இல்லாதவன்" என்ற தன்னடக்கம் கொண்டு அவன் திருவடியில் தலை சாய்ந்தால் பிழைத்துப் போவேன்.

இளைய பெருமாள் எனும் புகழ் பெற்ற இலக்குவன், பெருமாள் ஸ்ரீராமனைப் பற்றிக் கூறும்போது,

"அவர் அடியேனைத் தனக்குப் பின் பிறந்தவன் (தன் தம்பி) என்று இருப்பார்; நான் அவன் குணங்களுக்குத் தோற்று 'அவர் அடியவனாய் இருப்பவன்' என்றார்.

காட்டில் அத்ரி பகவான் ஆச்ரமத்தில் அவர் தர்ம பத்தினியிடம் (அநுசூயை) சீதாபிராட்டி சொன்னார். "எனக்கு எம்பெருமான் (ஸ்ரீராமன்) பக்கலில் ஸ்வரூபியாகவே பக்தியும், மரியாதையும் உண்டு என்பதை உலகத்தார் அறியார். அவர் இயற்கையில் குணசீலராக இருப்பதால்தான் என் பக்தியும், மரியாதையும் என அவர்கள் எண்ணலாம். அவருடைய நற்குணங்களும் ஏதோ ஒரு காரணத்தால், எப்போதாவது அவரை விட்டுப் பிரிய நேரிட்டாலும், நான் அவரிடம் அதே பக்தியுடனும் மரியாதையு டனும் தான் இருப்பேன்," என்கிறார்.


ஆழ்வாரும் அதேபோன்று எம்பெருமானிடம் ஸ்வரூபமாகவே (இயல்பாகவே) அடிமைப்பட்டு இருந்தாலும், அவன் குணங்களுக்குள் தோற்றுக் கிடந்ததால்தான் பாசுரங்கள் மலர்ந்தன.

**"ஆகிலும் கொடிய என் நெஞ்சம்**
**அவன் என்றே கிடக்கும் எல்லே"**
**(திருவாய்மொழி 5-3-5)**

"இயற்கையில் அமைந்தவனாய், எல்லை அற்றவனாய், மேன்மையினையுடைவனாய், எண் இல்லாதவனாய் உள்ள கல்யாண குணங்களின் கூட்டத்தை உடையவன் இறைவன்" -ஆளவந்தார்.

-தொடரும்

# ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசரும் - ஒரு ஒப்பு நோக்கு




சிவபரம் பொருளைப் பாடிப் பரவ உதவும் தோத்திரப் பாடல்கள் பன்னிரு திருமுறைகள். அவற்றை அருளிச் செய்தோர் 27 சிவனருட் செல்வர்கள். அவர்களுள் மூவர் முதலிகள் என்று குறிக்கப்பெறும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரில் முதல் இருவர் சம காலத்தில் வாழ்ந்தவர்கள் – கெழுதகை நண்பர்கள். தெய்வச் சேக்கிழாரின் பெரிய புராணம் பற்றி குறிப்பிடுகையில் "பிள்ளை பாதி; பெரியவர் பாதி'' என்று சொல்வர். சம்பந்தரைப் 'பிள்ளை' என்றும், அப்பர் பெருமானைப் 'பெரியவர்' என்றும் அவர் தம் வயதுப் பருவ நிலைகளைக் கருத்தில் கொண்டு, இவ்வாறு குறிப்பிடுவது வழக்கம்.

எவ்வுயிர்க்கும் சிவமாம் தன்மை வழங்கியதால் சம்பந்தர் 'ஆளுடையபிள்ளையார்' ஆனார். மருள் நீக்கியாராக இருந்த அப்பரின் நாவன்மையைப் பாராட்டி 'திருநாவுக்கரசு' என்ற நாமத்தை திருவதிகை வீரட்டானம் சூட்டி அருள, அப்பர் ஆளுடைய அரசனானர்.

முதல் ஆறு திருமுறைகளை அருளிய இவ்விரு அருளாளர்களின் வாழ்வும், வாக்கும் பற்றிய சிந்தனைகள் என்றும் சுவையானவை, பக்திப் பரவசத்தைப் பெருக்கக் கூடியவை.

சாதனைகள் பல நிறைந்தது சம்பந்தரது வாழ்வு. அப்பரின் வாழ்வோ சோதனைகள் மலிந்தது. சமணர்க்கு மட்டுமே சவாலாக இருந்தார் அப்பர். சம்பந்தரோ சமணர் களோடு பௌத்தவர் களையும் எதிர் கொண்டு வென்றவர். இவர்கள் இருவரும் சைவத்தின் இரு கண்கள். அப்பர் ஒரு ' அன்புக்கடல்' பொறுமையின் மறு உருவம். சம்பந்தரோ 'அருட்கடல்'. மூன்று வயதிலேயே சீர்காழித் தோணிபுரத் தீஸ்வரரால் ஆட்கொள் ளப்பட்ட குழந்தை அருளாளர்.

வாழ்ந்த ஆண்டுகளைக் கணக்கிட்டால் இருவருக்கிடையே பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. சம்பந்தரின் இவ்வுலக வாழ்க்கை அவரின் 16வது வயதிலேயே முடிவுற்றது. ஞானப்பால் அருந்தியதைத் தொடர்ந்து சிவ ஞானமும், நால்வகை

ஞானங்களும் கைவரப் பெற்றார். பதின்மூன்று ஆண்டுகளில் 110 தலங்களைத் தரிசித்து 384 பதிகங்களை (4155 பாடல்களை)ப் பாடி அருளினார். தந்தையாரின் தோள் மீது பயணித்த ஞானக்குழந்தை. பதிகப் பெருவழி கண்டவர். இதுவே, பின்னர் 'புனிதர் பேரவை' என்ற பெயரில் சேக்கிழாரால் பெருமையாய்க் குறிக்கப் பெறுகிறது. ஆளுடைய அரசர் 81 வயது வரை வாழ்ந்த பெரியவர். இளமைக் காலத்தில் சமணம் சார்ந்து இருந்தமையின் தம் 71வது வயதில் தான் சிவன் புகழ் பாடத் தொடங்கினார். சம்பந்தர் பாடத் தொடங்கியதற்கு சுமார் இரண்டாண்டுகட்குப் பின்னரே பாடத் தொடங்கிய அப்பர் 19 ஆண்டுகளில் 312 பதிகங்கள் (3066 பாடல்கள்) பாடியுள்ளார்.

ஞானசம்பந்தர்: ஆளுடைய பிள்ளையாரின் சிறப்புக்கள் பல. விரிவஞ்சி, சுருங்கக் கூற வேண்டுமாயின் அவரின் அசையா இறை நம்பிக்கை, சிவனையன்றி வேறு எந்த தெய்வ வழிபாட்டையும் ஏற்காத அவரின் 'ஏக தெய்வ வழிபாடு' தம்மைத் 'தமிழ் ஞான சம்பந்தன்' என்றே குறிப்பிட்டு வெளிப்படுத்திய அவரது 'தமிழ் மொழிப் பற்று" அவரின் பதிகங்களில் காணப்படும் 'ஒழுங்குமுறை' (8வது பாட்டில் இராவணன் கயிலையை அசைத்தது, 9வதில் மாலும் அயனும் சிவபெருமானின் அடி, முடி தேடிக் காண இயலாத நிகழ்வு, 10வதில் சமண, சாக்கியர்களின் இறை மறுப்புக் கொள்கையைச் சாடுதல்) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அனைத்திற்கும் முத்தாய்ப்பாக அமைவது, ஆளுடைய பிள்ளை முருகப் பெருமானின் திருஅவதாரமே என்ற அருணகிரிநாதரின் கூற்று. 'பிள்ளையாகப் பிறப்பதாயின் உம்மைப் போல் பிறக்க வேண்டும்' என்று சம்பந்தரை வியந்து போற்றியது 'நால்வர் நாண்மணி மாலை' ஆசிரியர் சிவப்பிரகாசர்.

பிள்ளையாரின் அருள் பொதிந்த வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

'திருக்கோலக்கா'வில், பிள்ளையார் தம் மெல்லிய கைம்மலர்களால் தாளமிட்டுப் பாடித் தம் பிஞ்சுக் கைகள் வருந்துமே என்று இரங்கித் திருவைந்தெழுத்து எழுதப் பெற்ற பொற்றாளம் அவரின் கைத்தலத்திலேயே வந்து பொருந்தும்படி அருளினார் எம்பெருமான். என்னே, கருணைக் கடலாம் சிவ பெருமானின் திருவருள்!

தந்தையாரின் தோள் மீது அமர்ந்து பயணித்து வந்த பிள்ளை, திருநெல்வாயில் அரத்துறைப் பயணத்தின்போது நடைப்பயணம் மேற்கொண்டார். மலரினும் மெல்லிய திருவடிகள் நிலத்தில் பட்டு வருந்தலாகாது என்று திருவுளம் கொண்ட இறைவன், வழியிலேயே மாறன்பாடி என்ற பகுதியில் அந்தணர்கள் மூலம் முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம் ஆகியவற்றைத் தந்தருளினார்.

வைகாசி மூலத்தில் அவதரித்த சம்பந்தர் 'முதற்குரு'வாக இறைவனை அறிமுகம் செய்வதாக வள்ளலார் கூறுகின்றார். சமணரை வென்று, 'மந்திரமாவது நீறு..." என்று பாடித் திருநீற்றினால் கூன்பாண்டியனின் வெப்பு நோயைக் குணப்படுத்தியமை, திருவாவடு துறையில், தந்தையாரின் வேள்விக்கான பொருளைப் பெற்றுத் தரும் வகையில், எடுக்க எடுக்கக் குறையாத, ஆயிரம் பொன் அடங்கிய, உலவாக்கிழியை சிவ பூதம் ஒன்று மூலம் பெற்றது, 'யாழ்மூரி' என்னும் அசாதாரணமான பதிகம் தருமபுரத்தில் பாடியது, திருமருகல் திருமானின் திருவருளால் வணிகனின் விடம் தீர்த்து அவனை உயிர்ப்பித்தது ஆகியவை நம்மை வியக்க வைப்பனவன்றோ! அவரை அருட்கடல் எனாது வேறு எவ்வாறு குறிப்பிடல் முறையாகும்?

நாவுக்கரசர்: 'பக்தி செய்தே முக்தி பெறலாம்' என்ற நந்தனாரின் நம்பிக்கைக்கு எடுத்துக் காட்டே நாவுக்கரசர். 'வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை" மனத்தால், வாக்கால், காயத்தால் வழிபட்ட சிவ பக்தர். அன்னாரின் புகழ் விரிக்கின் பெருகும். சுருங்கச் சிந்திப்போம்.

கயிலை மாமலையில் தவம் செய்து வந்த வாசீக முனிவரின் அவதாரமே அப்பர் பெருமான். சிவ பக்தை திலகவதியாரின் அன்புத் தம்பி. சமண நூல்களைப் பழுதறக் கற்று தருமசேனன் என்ற பட்டத்தோடு சமணக் கருவாக விளங்கியவர். தமக்கையின் வேண்டுகோளுக்கு இணங்கி, 'சூலை' நோயின் மூலம், புறச்சமய மோகத்தினின்று, மருள் நீக்கியாரை ஆட்கொண்டு திருநாவுக்கரசராக்கினார் அதிகை வீரட்டானத்து இறைவன். அத்திருக்கோயிலிலேயே தம் முதல்

திருப்பணியை உழவாரப் பணியாகத் தொடங்கினார்.

அவரது நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைப் பண்கள் முறையே, எம்பெருமானின் அருவுருவத்திருமேனி வருணனைகளாகவும், நெஞ்சறிவுறுத்தலாகவும், வேதாகமம் மற்றும் சித்தாந்த சாத்திர விளக்கங்களாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக, ஆறாம் திருமுறை அவரைத் திருத்தாண்டக வித்தகராக அறிமுகம் செய்கின்றது. ஒரு விந்தையைப் பாருங்கள். அது, சிவஞான போகத்தில் ஆறாம் சூத்திரம் கூறும் 'பதி' இலக்கணத்தைக் கூறுகிறது. தாண்டகம் அரிய ஒரு யாப்பிலக்கண வகையைச் சேர்ந்தது. பாக்களில் 27 எழுத்துக்களுக்குக் குறையாத அடிகள். திருமுறை ஆசிரியரும் 27 பேர்கள் அன்றோ! ஈண்டு, எம்பெருமானின் திருவுளப்பாங்கை சற்று நோக்கலாம். 'நாவுக்கரசரா'க விளங்குமாறு அருளப் பெற்றவர், தாண்டக வித்தகராக விளங்கி, '27 என்ற எண்ணிற்கு சிறப்பு சேர்த்தாரோ! தாண்டக யாப்பு வகையில், கடவுளையே அன்றி உயர்ந்த மனிதர் எவரையேனும் பாடு பொருளாகக் கொண்டு பாடுவர். இவ்வகைச் செய்யுட்களில் இறுதி அடியே செய்யுள் தலைப்பாக அமையும். முதன் முதலில் இந்த வகை யாப்பிலக்கணத்தில் இறை இலக்கியம் வழங்கிய பெருமை இவருக்கே உரித்தாயிற்று. நாவுக்கரசர் 'தாண்டக வேந்தரு'மானார்.

நாவுக்கரசர் நால்வகையால் சதுரப்பாடு அடைந்தவர். நீற்றறை பொய்கையாக நிறை நிலை அனுபவம், நஞ்சு அமுதமாதல், பட்டத்து யானை மிதியாமல் வணங்குதல், கடலினுள் அழுந்த வேண்டிய கருங்கல் தெப்பமாதல் ஆகிய சோதனைகளைத் திருவருள் துணையால் சந்தித்து, வெற்றி கொண்டவர். அப்பூதி அடிகளாரின் திருமகனை உயிர் பெறச் செய்த சாதனையாளர்.

திருப்பெண்ணாகடத்தில் இடபக்குறியும், சூலக்குறியும் பொறிக்கப் பெறல், நல்லூரில் இறைவனின் திருவடித் தீக்கை பெற்றது, திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றது, திருப்பைஞ்சீலி பயணத்தின்போது பொதிசோறு பெற்றது ஆகியவை நாவுக்கரசர் பால் இறைவன் கொண்ட திருவுள வெளிப்பாடுகள்.

தள்ளாத வயதிலும் உடலை வருத்தி மேற்கொண்ட தம் கயிலைப் பயணம் கை கூடாத நிலையில், திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காட்டி அருளியது இவர் பெற்ற சிவனருளுக்கு முத்தாய்ப்பாக அமைகிறது. 'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்'' என்று அருளுகிறார் அரசர். 'மகாத்தியமும் சாத்திரமும் ஆனார் தாமே" என்று அருளி 'தோத்திர வழியில் சாத்திரம்' என்ற மரபைத் தோற்றுவித்தார் அப்பர் பெருமான்.

'அன்பே சிவம்' என்று செயல்பட்டு சமயப் பணியையும் சமுதாயப் பணியையும் இணைத்துத் தொண்டாற்றிய முன்னோடி. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று உழவாரப் பணியைத் தொடர்ந்தவர். "சாத்திரம் பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கண்டு என் செய்வீர்?" என்று வினவிய சமூகச் சீர்திருத்தவாதி.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனனை அஞ்சோம்'' என்று கூறி அதர்மத்தை எதிர்த்து நின்ற அஞ்சா நெஞ்சு கொண்ட ஒரு புரட்சித் துறவி.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படி நிலைகளிலும் பழகி, 81–வது வயது வரை நிறைவான ஒரு பெருவாழ்வு வாழ்ந்த அனுபவ ஞானி அறிவு ஜீவி. "திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர் என்ற நம்பி ஆரூராரின் அறிமுகச் சொற்றொருக்கு உரியவர்.

முடிவுரை:

பிள்ளையும் அரசரும் நான்கு முறை சந்தித்துக் கொண்டனர். சந்திப்பு நிகழ்ந்த பதிகள் சீர்காழி, திருப்புகலூர் (இரண்டு முறை) திருப்பூந்துருத்தி, சந்திப்புகள் அனைத்தும், சிவஞான போதம், பன்னிரண்டாம் சூத்திரம் கூறும் 'சிவனடியார் திருவேடமும் சிவாலயத்தில் உள்ள சிவலிங்கத் திருமேனியும் சிவன் என்றே கண்டு தொழுவது ஒரு சீவன் முத்தரின் பண்பு' என்ற ஒருகலாற்றுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகளாக இருந்தன. இருவருக்கும் இடையே வெளிப் பட்டது பரஸ்பரம் அன்பும், மரியாதையும்.

இருவரில் யாருக்கு முதல் இடம்–யாத்திரை வேகத்தில், தேவாரம் பாடுவதில், பாடத் தொடங்கியதில், முக்தி அடைந்ததில்? சுவையான கேள்விகள் தான். ஓரளவு சர்ச்சைக்குட் பட்டதாகவும் இருக்கலாம் நம் நிலைப்பாடுகள்.

அப்பர் பெருமான் 81 வயது வரையும், சம்பந்தர் 16 வயது வரையும் வாழ்ந்தார். தம் மூன்றாம் வயதில் பாடத் துவங்கிய சம்பந்தரை

71வது வயதில் பாடத் துவங்கிய அப்பரோடு ஒப்பிட்டால், பின்னவர் யாத்திரையில் விரைவு கொண்டவராகவும், முன்னவர் சற்று நிதானம் காட்டியவராகவும் காணப்படுகின்றார். சம்பந்தரோ கிட்டத்தட்ட இரண்டாண்டுகள் முன்னர் பாடத் தொடங்கியிருக்கலாம். ஆனால், சம்பந்தருக்கு குறைந்தது ஓராண்டுக்கு முன்னராவது அப்பர் முக்தி அடைந்திருக்க வேண்டும்.

காரணம், சம்பந்தரின் திருமணத் திற்கு அப்பர் வந்து கலந்து கொள்ளவில்லை. வடக்கே திருக்கல்யாணத்திற்கே செல்ல முயன்றவர் முதியவர் அப்பர்; ஆனால், வடக்கே திருக்காளத்தி வரை மட்டுமே பயணித்தார் சம்பந்தர்.

அருளாளர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் காண முயல்வது முறையன்று. உத்தம தவப் பயன்களுக்கேற்றவாறு இறையருள் சித்திக்கும். ஆகவே, நம் புறக்கண்களுக்கு, இறைவனின் கருணைப் பெருக்கு அனைவர்பாலும் ஒரே சீராக வெளிப்படுவதில்லை போன்று தோன்றும்.

திருமறைக்காட்டுத் திருக்கோயிலில் பன்னாட்களாக அடைக்கப்பட்டிருந்த கதவு 'திறக்க' அப்பர் ''பண்ணிமனர் மொழியாள் உமைபங்கரோ...'' என்று துவங்கி, பதினாறு பாடல்கள் கொண்ட பதிகம் 'முழுவதுமாக' பாடி முடிக்க வேண்டிய நிலை. மாறாக, வழிபாட்டிற்குப் பின்னர், சம்பந்தரின் "சதுரம் மறைதாள்..." என்று துவங்கும் பதிகத்தின் முதல் பாடல், பாடி, முடிக்கப்பட்டவுடனேயே கதவு 'மூடிக் கொள்ள, எஞ்சிய பாடல்களை கோயிலின் வெளியே நின்று தான் திருக்கடைக் காப்புடன் நிறைவு செய்தார் பிள்ளையார். மேற்போக்காக நோக்குகையில் ஏதோ விவகாரம் தெரிகிறது.

கதவம் திறக்க பதினோறு பாடல்கள்; மூட ஒன்றே ஒன்றா? போதாதா சுவையான ஒரு சர்ச்சை தோன்ற! இரு அருளாளர்களின் அருட்சக்தியில் 'கூடக் குறைவு' ஏதேனும் இருக்குமோ!

இறைவனே அப்பரின் நாவண்மையை வியந்து பாராட்டி 'நாவுக்கரசர்' என்ற திருநாமம் வழங்கியுள்ளாரே.

ஆகவே, அவரின் பாடல்களில் உள்ள இனிமையை கிரகிக்க பதினோறு பாடல்களை முழுமையாக செவிமடுத்தாரோ எம்பிரான்! விரைவிலேயே திகட்டி விட்டதால் சம்பந்தரின் முதல் பாடலோடு கதவு மூடத் திருவுளம் கொண்டாரோ!

சற்று சிந்தித்தால் ஈண்டு சர்ச்சைக்கு இடமே இல்லை என்பது விளங்கும். எம்பெருமானும் பாரபட்சம் ஏதும் காட்டவில்லை. ஒவ்வொருவரும் தம் பத்துப் பாடல்களை கோயிலுக்கு 'வெளியே' நின்றே பாடினர்; தலா 'ஒரு' பாடலை மட்டும் உள்ளே நின்று பாடினர்.

திருப்புகலூரில், "எண்ணுமகன் என் சொல்லி எண்ணு கேனோ" என்ற திருத்தாண்டகம் பாடி, இறைவனின் திருவடிசேரும் விண்ணப்பத்தை முன் வைத்து, சித்திரை சதய நன்னாளில் "புண்ணியா உன்னடிக்கே போது நின்றேன்" என்று பாடி சிவன் சேவடி சேர்ந்தார் நாவுக்கரசர்.

திருநல்லூரில், பெருமணம் என்னும் திருக்கோயிலில் நம்பியாண்டார் நம்பியின் திருமகளை மணந்து, இறைவன் முன்னின்று, 'கல்லகப் பெருமானம்" என்ற திருப்பதிகம்பாடி, உள்ளம் உருகி ''நினது திருவடி நிழலில் எளியோன் சேரும் பருவம் இதுவே" என்று விண்ணப்பித்தார், சம்பந்தர்.

அதுபோழ்து சிவபெருமான் அக்கோயிலில் தூய பெருஞ்சோதியாய் சோதிப்பிழம்பாய் தோன்றி ''ஞானசம்பந்தனே நீயும் உன் மனையாளும் உனது திருமணக் கோலம் காண வந்துள்ள யாவரும் இந்தச் சோதியினுள்ளே வந்து சேர்மின்' என்று திருவாய் மலர்ந்தருள அதிற்புகுதற்கு என வாயில் ஒன்றும் வகுத்துக்காட்டி அருளினான்.

அந்நிலையில் ஆளுடையபிள்ளையார் உள்ளம் உருக, "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி..." எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடி, அனைவரோடும், சோதியுள் புகுந்தார். சிவபரம் பொருளுடன் ஒன்றி உடனானார்.

அருட்கடலான ஆளுடைய பிள்ளையாரும், அன்புக் கடலான ஆளுடைய அரசரும் கருணைக் கடலான சிவபெருமானின் அருட்பார்வையை சம அளவிலேயே பெற்று நிறைவான வாழ்க்கை வாழ்ந்த சமகால அருளாளர்கள் அவர்களின் வாழ்வும் வாக்கும் நம்மை சிவ நெறிப்படுத்த சிவனருள் சித்திக்கட்டும்.

சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம்
டாக்டர் எம்.ஆர்.சந்தானம்

# கார்த்திகையில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்.

**சிறப்புலி நாயானர்**

சோழ நாட்டில் திருவாக்கூர் என்ற திருத்தலத்தில் மறையவர் குலத்தில் பிறந்தவர் சிறப்புலியார்.

இவர் அடுத்தார்க்கு இல்லையென்று கூறாது இன்னுரை கூறி, அகமும் முகமும் மலர்ந்து அன்னமும் சொன்னமும் வழங்கி வந்தார். வேள்வி பல புரிந்தார். சிவபக்தி செய்து சிவன் சேவடி சேர்ந்தார்.

**மெய்ப்பொருள் நாயனார்**

சேதி நாட்டில் திருக்கோவிலூரில் மலை நாட்டு மன்னராக வாழ்ந்தவர் மெய்ப்பொருள் நாயனார். திருநீறும் கண்டிகையும் பூண்ட தவ வேடத்தையே மெய்ப் பொருளாகக் கருதி வாழ்ந்ததனால் இப்பெயர் பெற்றார்.

அடியவர்களின் கருத்தறிந்து ஏவல் புரிவார். அரசியல் அறத்தைக் கடைபிடித்தவர். பகைவர்களை வென்று, வீரமுடன் விளங்கினார். தனது நாட்டில் உள்ள சிவாலயங்கள் எல்லாவற்றிலும், ஏழிசைப் பாடல்களும் ஆடல்களும் நிகழுமாறு நித்திய வழிபாடும், நைமித்திக வழிபாடும் சிறக்குமாறு செய்தார். அடியார்க்கு நிரம்பப் பொன்னும், ஆடையும் ஈந்து மகிழ்ந்தார்.

**தேடிய மாடுநீடு செல்வமும் தில்லை மன்றுள்**
**ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும்என்று**
**நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்தபோது**
**கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்.**

முத்தநாதன் என்ற சிற்றரசன் இவரை வெல்லும் விருப்பம் கொண்டு நால்வகைப் படையுடன் வந்து எதிர்த்துப் போர் புரிந்து பலமுறை தோற்றுப் போனான். வஞ்சகம் மிகுந்த நெஞ்சமுடைய அவன் இவருடைய தவ வேடத்தை மெய்ப்பொருளாக வழிபடும் மாண்பினைக் கண்டு வஞ்சனையால் வெல்லத் திட்டம் இட்டான். உடம்பு முழுவதும் திருநீறு பூசிக் கொண்டு புத்தகத்தில் வடிவாளை மறைத்துச் சுருட்டி எடுத்துக் கொண்டு திருக்கோவலூர் வீதியில் வந்தான். மாடி மீது மாதர்கள் கூந்தல் அசைந்து ஆடுவது கருப்புக் கொடி காட்டுவது போல் இருந்தது. அடியார்



சிறப்புலி நாயனார்

என்று காவலர்கள் தடை செய்யாது விடுத்தார்கள். தத்தன் என்ற அறிவுடைய காவலன் மன்னருடைய இருக்கையின் அருகில் காவல் புரிந்திருந்தான். அவன் முத்தநாதனைத் தொழுது, "மன்னவர் துயில் புரிகின்றார். சமயந் தெரிந்து போவது நல்லது" என்றான்.

''நான் வேந்தற்கு நன்மையான உறுதிப்பொருள் கூறப் போகிறேன். நீ நில்," என்று கூறி விட்டுப் பாதகன் அவனையும் கடந்து உள் புகுந்தான். பொன்மயமான கட்டிலில் இறைவர் தூங்கிக் கொண்டிருந்தார். அருகில் அரசமாதேவி அமர்ந்திருந்தார். அம்மையார் எழுந்து அரசரை எழுப்பினார். வேந்தர் எழுந்து, நான் செய்த புண்ணியப் பயன் என்று கூறித் தொழுதார்.

"வேந்தே! உங்கள் சிவனார் கூறிய ஆகமம் ஒன்று எங்கும் இல்லாதது. கொண்டு வந்துள்ளேன். இதை நான் உனக்குத் தனிமையில் உபதேசிக்க வந்தேன்," என்றான் முத்தநாதன்.

இலட்சுமி போல் அருகில் நின்ற மனைவியரை அந்தப்புறம் போக அனுப்பிவிட்டு, பொய்யனைப் பொற்பீடத்தில் இருத்தித் தாம் நிலத்தில் அமர்ந்து, "அருள்புரியும்" என்றார் இறைவர். அப்பாதகன் புத்தகம் அவிழ்ப்பான் போல் நடித்து, வடிவாளை எடுத்து, தான் முன் நினைத்ததை முடித்துக் கொண்டான். வடிவாள் மார்பில் பாய உதிரம் ஒழுக விழும் நாயனார், தமது கொள்கை நழுவாதவராய் மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று தொழுது விழுந்தார்.

தீயன் உள்ளே சென்றபோது, உள்ளத்தை அங்கே வைத்த தத்தன் ஒருகணப் பொழுதுக்குள் உள்சென்று நீண்ட வாளினால் வெட்டுவதற்கு ஓங்கினான். "தத்தா நமர்" என்று தடுத்து வீழ்ந்தார் அரசர்.

தலைவரால் தடுக்கப்பட்ட தத்தன் தலையினால் வணங்கி "அடியேன் செய்யும் பணி யாது?" என்று கேட்டான். "வேந்தர்! இத்தவத்தினரை இடையூறின்றிக் கொண்டு போய் விடு," என்றார். அவனைக் கொல்ல வந்தவர்களை எல்லாந் தத்தன் தடுத்து நகரங் கடந்து இடர் இன்றி விடுத்து வந்து, மன்னரைத் தொழுது நின்றான். "இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்" என்று கூறி அன்பு செய்தார். உள்ளம் வருந்துகின்ற சுற்றத்தார்க்கும் அரசியல் குழுவினருக்கும், ''திருநீற்று அன்பினைப் பாதுகாப்பீராக" என்று கூறி, சிவபெருமானைச் சிந்தை செய்து சிவபதம் அடைந்தார்.

### கணம்புல்ல நாயனார்

வெள்ளாற்றுக்குத் தென் கரையில் இருக்குவேளூர் என்று ஒரு ஊர் உளது. அந்த ஊரில் கணம் புல்லர் தோன்றினார். அந்தவூரவர்க்கு அவர் அதிபராய் அளவற்ற செல்வம் படைத்தவராய் விளங்கினார். சிவன்



பதமே மெய்ப் பொருள் எனத் தெளிந்து சிவனடிக்கு அன்பு செய்து வந்தார்.

செல்வத்தின் பயன் திருவிளக்கு ஏற்றுவது என நினைந்தார். சிவாலயத்தில் இடையறாது திருவிளக்கேற்றி வழிபட்டார். பிறகு அவர் வறுமையால் வருந்தினார்.

சிதம்பரம் சென்று திருப்புலீச்சுரம் என்ற கோயிலில் தம்பால் இருந்த பொருள்களை விற்று விளக்கெரித்து வந்தார்.

வேறு ஒன்றும் இன்மையால் கணம் புல்லை அரிந்து வந்து விற்று, அதனைக் கொண்டு விளக்கெரித்தார். கணம்புல் விலை போகவில்லை. அதனையே விளக்காக எரித்தார்.

ஒரு யாமம் எரிக்க நியதிப்படி புல் போதாமையால் தன் திருமுடியையே விளக்காக எரித்தார். புரம் எரித்தாராகிய புனிதர் அவருக்குச் சிவலோகம் கொடுத்து அருள்புரிந்தார்.



ஆனாய நாயனார்

ஆனாய நாயனார்

சோழ நாட்டில், திருமங்கலம் என்ற தலத்தில் இடையர் குலத்தில் தோன்றினார் ஆனாயர். இளமையில் இருந்தே திருநீற்று அன்பினில் சிறந்து விளங்கினார். திருஐந்தெழுத்தையும் இடையறாது ஓதுவார்.

பசுக்குலங்களை மேய்த்துப் பரமனைச் சிந்தித்துக் கொண்டிருந்தார். பசுக்குலங்கள் அவர் அன்பினால் நன்கு பெருகின.

ஒரு கார்த்திகை மாதம் அஸ்த நன்னாளில் பசுக் கூட்டங்களை ஓட்டிக் கொண்டு ஒரு கொன்றை மரத்தின் கீழே சென்றார். கொன்றை மலர் அவருடைய சிவபக்தியை மிகுவித்தது. புல்லாங்குழல் எடுத்து ஐந்தெழுத்தை அதில் இணைத்து வாசித்தார். அந்த நாத வெள்ளம் விண்ணும் மண்ணும் ஓடி நிறைந்தது. சராசரங்கள் யாவும் இசைவயப்பட்டு உருகின.

பாம்பும் மயிலும் சேர்ந்து விளையாடின. விண்ணவர் விமானங்களில் வந்து கேட்டு உருகினார்கள்.

நலிவாரும் மெலிவாரும்
உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயில்மீது
மருண்டு விழும்
சலியாத நிலை அரியும் தடங்கரியும்
உடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய
புல் வாயும்.


இசைப் பிரியராகிய சிவபெருமான் சிவகாமியுடன் காட்சி தந்தார். "இந்நிலையே நம் சிவலோகம் வருக'' என்று அருள் புரிந்தார். ஆனாயர் அரனுலகம் புகுந்தார்.

திருமங்கலம் – இடையர். கார்த்திகை – அஸ்தம்.

மூர்க்க நாயனார்

தொண்டை நன்னாட்டில் திருவேற்காடு என்ற திருத்தலத்திலே வேளாளர் மரபில் பிறந்தவர் மூர்க்கர். இவர் சிவனடியார்க்கு நிரம்ப அன்னம் வழங்கிய பின் தான் உண்பார். அடியவர் உவப்ப வேண்டுவன எல்லாம் வழங்குவார். அதனால் அவர்பால் பலர் அதிகம் யாசித்தார்கள். வீடு நிலம் தோட்டம் எல்லாவற்றையும் விற்று அறஞ்செய்தார். வறியவர் ஆனார்.

அவருக்குச் சூதாடத் தெரியும். பலரிடமும் சூதாடி அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு அறஞ்செய்தார். இவரே



மூர்க்க நாயனார்

நாள்தோறும் வெல்லுவதால் அவரிடம் யாரும் சூதாட வரவில்லை. பலபதிகள் போய்ச் சூதாடினார். முடிவில் குடந்தை மாநகரம் போய் அங்குச் சூதாடி அறஞ் செய்து வந்தார். தோற்றவர் பொருள் தர மறுத்தால் கத்தியால் குத்திவிடுவார். அதனால் தான் மூர்க்கர் என்று பேர் பெற்றார். சூதினால் வரும் பொருள் தீது என உணர்ந்தவர் அவர். அதைத் தமது திருக்கரத்தால் தீண்டாமல் அமுது சமைப்போர் பெற்று

அமுதாக்குவார்கள். அடியார் உண்ட கடைசி பந்தியில் தாம் அமர்ந்து உண்பார். இவ்வாறு தொண்டு புரிந்து அண்டர்பிரான் அடித் தாமரை சேர்ந்தார்.

திருவேற்காடு – வேளாளர். கார்த்திகை – மூலம்.








கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் 15.10.2009 அன்று தென் மாநிலங்களின் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திருகேஆர்பெரிகருப்பன் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்.

சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் மண்டல இணை ஆணையர் திருமதி. ந. திருமகள் மற்றும் அலுவலர்கள்.



மொரீஷியஸ் நாட்டின் மேதகு துணை ஜனாதிபதி திரு. ஆங்கிடி வீரைய்யா செட்டியார் அவர்களை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் மரியாதை நிமித்தமாக 27.10.2009 அன்று சந்தித்தார். இச்சந்திப்பின்போது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அறநிலையத் துறை அலுவலர்கள், இந்தியாவில் உள்ள மொரீஷியஸ் நாட்டின் கௌரவ தூதர் திரு. வி.ராமன் அவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.











8.10.2009 அன்று பூசாரிகள் நல வாரியத்தின் கூட்டம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. க.முத்துசாமி இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையக கூடுதல் ஆணையர்கள் திரு.தி.ஜெயராமன் அவர்கள், திரு.இரா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நல்வாழ்வு அருளும்







**சை**வத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளில் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் சிவபெருமானுக்கு மயானத்தில் திருக்கோயில் அமைத்து வழிபட்டு வந்தனர். அந்த வகையில் அவர்கள் வழிபட்ட திருக்கோயில்கள் அனைத்தும் மயானம் என்றே வழங்கப்பட்டது. அவற்றுள் கடவூர் மயானம், காழி மயானம், வீழி மயானம், கச்சி மயானம், நாலூர் மயானம் என ஐந்து மயானங்கள் முக்கியம் வாய்ந்தவையாகக் கூறப்படுகின்றன.

இதேபோல, சிவபெருமான் பிரம்மனைத் தனது கோபத்தால் அழித்து அவனை சாம்பலாக்கி மீண்டும் உயிர்ப்பித்த இடத்திற்கும் மயானம் என்றும் கூறுவர்.

மொத்தத்தில், மயானம் என்பதும் ஈசனது திருக்கோயிலே ஆகும். **'காடுடைய சுடலை பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்'** என திருஞானசம்பந்தரும் **'கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை'** என்று மாணிக்கவாசகரும் குறிப்பிடுகின்றனர்.

இறைவன் விரும்பி உறைவதும், நல்லவர்கள் தொழுது ஏத்துவதுமாகிய நாலூர் மயானத்தை வணங்காதவர்கள் அனாதியான சைவ மார்க்கத்தை அடைய முடியாது என்பதை,

**'நல்லார் தொழுதேத்தும் நாலூர் மயானத்தை**
**சொல்லாதவரெல்லார் செல்லாதார் தொன்னெறிக்கே'**

என்ற வரிகள் மூலம் சம்பந்தர் குறிப்பிடுகிறார். இந்த நாலூர் மயானமே இன்றைய வழக்கில் திருமெய்ஞ்ஞானம் என்ற பெயரில் அழைக்கப்படும் சிற்றூராகத் திகழ்கிறது.

முதலாம் குலோத்துங்கச் சோழனின் படைத்தலைவனான பிரமாதிராஜன் எனும் ஞான மூர்த்தி பண்டிதன் பிறந்த ஊர் திருநாலூராகும்.

# நாலூர் மயானம்!

அமைவிடம்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில் அமைந்துள்ள திருத்தலம் திருமெஞ்ஞானம் எனப்படும் நாலூர் திருமயானமாகும். குடவாயிலுக்கு வடக்கே. நான்கு கிலோமீட்டர், கும்பகோணத்திற்குத் தெற்கே 16 கிலோமீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

திருச்சேறையிலிருந்து குடவாசல் நோக்கிச் செல்லும் பாதையில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் நாலூர் என்ற சிற்றூர் உள்ளது. அதையடுத்து அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள பாலத்திற்கு முன்பாக கீழிறங்கினால், வடக்கே 1 கிலோமீட்டர் தொலைவில் திருமெய்ஞ்ஞானத்தை அடையலாம். கும்பகோணம்–திருவாரூர் வழித்தடத்தில் அத்திக்கடை பாலம் என்ற பஸ் நிறுத்தத்தில் இறங்கியும் இவ்வூர் வரலாம்.

நாலூர் வைப்புத் தலமாகவும், திருமெய்ஞ்ஞானம் பாடல்பெற்ற தலமாகவும் விளங்குகின்றன. பசுமை வயல் சூழ்ந்த சிறிய ஊராக திருமெய்ஞ்ஞானம் திகழ்கின்றது.

ஆலய அமைப்பு

இவ்வாலயம் கிழக்கு நோக்கி இராஜகோபுரமின்றி எளிய நுழைவாயிலுடன் அமைந்துள்ளது. எதிரே சிறிய நந்தி மண்டபத்தினுள் நந்திதேவர் காட்சி தருகிறார். சதுரமான கருவறை கொண்ட இவ்வாலயம் முழுவதும் கருங்கற்களால் ஆன ஏகதள கற்றளியாகும்.

இக்கோயில் பழைய சோழர் காலக் கலைப்பாணியை வெளிப்படுத்துகின்றது. இவ்வாலயம் முதலாம் ஆதித்த சோழனால் கற்றளி ஆக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கல்வெட்டுகளில் திருமயானத்து ஸ்ரீ மூலத்தானத்துப் பெருமானடிகள் என்று அழைக்கப்பட்ட இறைவனின் இன்றைய பெயர் ஞானபரமேஸ்வரர் ஆகும். கருவறையின் வெளிப்புறக் கோஷ்டங்களில் எழில்மிகுந்த சிற்பங்கள் அமைந்துள்ளன. கருவறையின் மூன்று பக்கங்களிலும் 23 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இறைவன் – இறைவி

இறைவனின் திருப்பெயர் ஞானபரமேஸ்வரர் ஆகும். இறைவன் சிறிய வடிவில் எளிமையாக கிழக்கு





நோக்கி காட்சி தருகின்றார். இவர் திருமுடியில் நாகங்கள் ஊர்வதாக இன்றும் நம்பப்படுகிறது.

பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூரும் செஞ்சடையான்
வெண்ணூல் சேர் மார்பினான்.

என சம்பந்தரின் பாடல் வரிகள் மூலம் இது உறுதிப்படுத்தப்படுகின்றது.

அன்னை ஞானாம்பிகை தெற்கு முகமாக தனிச் சன்னதியில் இறைவனைப் போலவே சிறிய வடிவில் எளிமையாகக் காட்சி தருகின்றாள்.

**தலம்–தீர்த்தம்**

இத்தலத்தின் தீர்த்தமாக சந்திர தீர்த்தம் அமைந்துள்ளது.

**ஆலயச் சிறப்புகள்**

இவ்வாலயத்தின் கருங்கல் நடராஜர் திருமேனி குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாலயத்தை எழுப்பிய ஆதித்த சோழன் நின்ற நிலையில் வணங்குவதையும் அவன் மனைவி அடிபணிந்து வணங்குவதையும், இத்திருக்கோயிலில் காணலாம். இத்தலத்தில் திருமால் வழிபட்டதன் அடையாளமாகத் திருமாலின் திருமேனி இறைவனின் கருவறை மேல்புறத்தில் அமைந்துள்ளது. பிரம்மாவின் திருமேனியும் துர்க்கையின் திருமேனியும் கலைநயம் கொண்டு விளங்குகின்றன.

நாலூரை அடைவுத் திருத்தாண்டகத்தில் அப்பரும், சுந்தரரும், பெரிய புராணத்தில் சேக்கிழாரும் குறிப்பிட்டுள்ளனர்.

**கல்வெட்டுகள்**

இத்தலத்தில் கி.பி.1910ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வறிக்கையின் மூலம் 23 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. முதலாம் ஆதித்த சோழன் காலத்திலிருந்து மூன்றாம் இராஜராஜ சோழன் காலம் வரை பல்வேறு கல்வெட்டுகள் பல வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுகின்றன.

இக்கல்வெட்டில் இவ்வூர் இராஜராஜ சோழனின் தாயார் வானவன் மாதேவியின் பெயரால், வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டுள்ளது. மேலும், நாலூர் திருமயானம் குலோத்துங்க சோழ வளநாட்டில் செற்றூர் சுற்றத்தில் இடம் பெற்றுள்ள ஊராகத் திகழ்கிறது.

இக்கல்வெட்டுகள் மூலம் இவ்வாலயத்திற்கு வழங்கப்பட்ட கொடைகள், வசூலிக்கப்பட்ட வரிகள், ஊர் சபை நடவடிக்கைகள் போன்றவற்றை அறிய முடிகிறது.

இவ்வூரில் வைணவ ஆலயம் ஒன்று இருந்ததையும், அதற்கும் கொடைகள் வழங்கப்பட்டதையும், கட்டளைகள் ஏற்படுத்தியதையும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**நாலூர் சிவாலயம்**

திருமெஞ்ஞானம் எனப்படும் நாலூர் மயானத்திற்கு அருகே உள்ள நாலூரில் ஒரு பழைமையான சிவாலயம் அமைந்துள்ளது. இறைவன் பெயர் பிலாசவனேசுவரர். இறைவி பெரிய நாயகி. பிலாசவனம் என்றால் புரசு மரக்காடு என்பது பொருளாகும்.

கஜப்பிருஷ்ட விமானத்தின் மேற்பகுதி பலாப்பழம் போன்ற அமைப்பைக் கொண்டுள்ளது. இதன் தலவிருட்சம் பலாமரமாகும்.

இது சிவபெருமான் அருச்சுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுத்தருளிய புராணத்துடன் தொடர்பு கொண்ட தலமாகக் கூறப்படுகிறது. இது தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது.

**தரிசன நேரம்**

திருமெஞ்ஞான ஆலயம் குக்கிராமத்தில் அமைந்துள்ளதால், ஒரு கால பூஜை மட்டுமே இங்கு நடைபெறுகின்றது.

பகல் நேரத்தில் தரிசிக்க வருவோர் கோயில் அருகிலுள்ள பெரியவர் வீட்டில் கேட்டுக்கொண்டால் இறைவனை எளிதில் தரிசித்து மகிழலாம்.

இத்திருக்கோயில் முன்னோர்கள் ஆன்மா சாந்தி அடைய சிறந்த வேண்டுதல் தலமாக விளங்குகிறது.

தங்களது மூதாதையர்களின் ஆன்மா சாந்தியடைய விரும்புவோர் தரிசிக்க வேண்டிய தலமாக திருமெய்ஞ்ஞானம் திருத்தலம் திகழ்கின்றது.

படங்கள், கட்டுரை– பனையபுரம் **அதியமான்**

# ஒரே பாசுரம் பெற்ற திருக்கவித்தலம் (கபிஸ்தலம்)

ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்த வைணவத் தலங்களைத் திவ்ய தேசங்கள் எனும் திருநாமத்தால் வழிபடுதல் மரபாகும். அத்தகைய திவ்ய தேசங்கள் 108 ஆகும்.



திருமழிசையாழ்வார்
தை - மகம் (திருமழிசை)

அவற்றில் இருவிலங்கு களுக்கு அதாவது யானைக்கும், முதலைக்கும் காட்சியளித்து அருள்பாலித்த ஒரே திவ்ய தேசம் திருக்கவித்தலம் (கபிஸ்தலம்) ஆகும்.

இத்தலம் தஞ்சாவூரில் இருந்து திருவையாறு வழியாகக் கும்பகோணம் செல்லும் தடத்தில் இருக்கிறது. பாபநாசம் ரயில் நிலையத்தில் இருந்து ஏறத்தாழ 4 கி.மீ., தொலைவில் உள்ளது.

இத்திவ்யதேசம் திருமழிசை யாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பட்டதாகவும், இத்தலம் மிகப் பழமையான திவ்யதேசமாகும்.

மூலவர் இங்கே புஜங்க சயனமாக பள்ளி கொண்ட கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலமாகக் காட்சி தருகிறார். கஜேந்திரனுக்கு அருள் பாலித்ததால் பெருமாளுக்குக் கஜேந்திர வரதன் என்ற திருநாமமும் தீர்த்தத்திற்குக் கஜேந்திர புஷ்கரணி என்றும் வழங்கப்படுகின்றன. தாயாருக்குப் பொற்றாமரையாள் எனும் படிக்கும் ரமாமண வல்லி எனும் திருநாமமும் சூட்டப்பட்டுள்ளன.

கூற்றமும் சாரா கொடுவினையும்
சாரா,தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்
ஆற்றங்
கரை கிடக்கும் கண்ணன் கடல்
கிடக்கும்,மாயன்
உரைக்கிடக்கும் உள்ளத் தெனக்கு
(2431)

என்று திருமழிசையாழ்வார் இத்திவ்ய



தேசத்தை மங்களாசாசனம் செய்துள்ளார்.

அனைவரும் அறிந்த கஜேந்திர மோட்ச வரலாறு இங்குதான் நிகழ்ந்ததாக விஷ்ணு புராணம் கூறுகிறது. இந்திராஜும் எனும் அரசன் திருமாலின் பக்தியில் ஈடுபட்டு இருக்கும்போது அவரிடம் மனம் ஒன்றிப் புற உலகையே மறந்து விடுவான். அவன் ஒருசமயம் அந்நிலையில் இருந்த காலத்தில் துர்வாசர் அங்கு வந்தார். அவன் கண் திறந்து பாராததால், "நீ பக்தியில் சிறந்தவன் என்ற மமதை பிடித்தவனாய் இருப்பதால் விலங்குகளில் மதம் பிடித்த யானையாகப் பிறப்பாய்," என்று துர்வாசர் சாபமிட்டார்.

அம்மன்னன் கண் விழித்துப் பிழை உணர்ந்து சாப விமோசனம் வேண்டினான். "ஒரு முதலை உன் காலைப் பிடிக்கும்போது, நீ திருமாலை அழைக்க சாப விமோசனம் கிடைக்கும்," என்றார்.

இதேபோல, அகத்தியர் ஒரு குளத்தில் குளிக்கையில் கூஹு எனும் அரக்கன் தண்ணீரில் மூழ்கி அவர் காலைப் பற்றினான். அகத்தியர் கோபமுற்றார். அவனை நீ முதலையாகப் பிறப்பாய் என்று சாபமிட்டார். அவன் தவறை உணர்ந்து மன்னிக்க வேண்டினான். "நீ கஜேந்திரன் எனும் யானையின் காலைப் பற்றும் காலத்தில் திருமாலின் சக்கரத்தால் உனக்கு சாப விமோசனம் கிடைக்கும் என்று அகத்தியர் அருளினார்.

இச்செயல் இங்குள்ள கஜேந்திர புஷ்கரணியில் நடைபெற்றதாம். இந்நிகழ்ச்சி பாரதத்திலும்

"கூற்றுரல் சுராவின் வாயின்றழைத்த
குஞ்சர ராஜன் முன் அன்று
தோற்றிய படியே தோற்றினான் –
முடிவும் தோற்றமும் இலாத
பைந்துழவோன்"

எனும் அடிகளால் கூறப்படுகிறது.

இங்கு எழுந்தருளியுள்ள பெருமாளை "ஆற்றங்கரை கிடக்கும் அப்பன்" என்று பெயரிட்டு மங்களாசாசனம் செய்ததால் இத்திவ்ய தேசம் மங்களாசாசனம் பெற்றது என்பர்.

– பாச்சுடர் வளவதுரையன் எம்.ஏ.,


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# 'சித்து நிகழ்த்தாத சித்தர்'

கடவுளைக் காண முயல்பவர்கள்; கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் அல்லது கடவுள் மயமானவர்கள் சித்தர்கள். அன்னார், அட்டமா சித்துக்கள் புரியும் ஆற்றல் பெற்றவர்கள் என்பது சமயவாதிகளின் நம்பிக்கை. அகத்தியர், திருமூலர், தாயுமானவர் ஆகியவர்கள் சித்தர்களுள் மிகச் சிறந்தவர்களாவார்கள். அவர்களுடைய வழித்தோன்றலாக விளங்கினார் இராமலிங்கர். ஆம், வாழையடி வாழையென வந்த சித்தர் மரபிலே வள்ளலாரும் ஒருவர்.

வள்ளலாரும்,

**"சித்தர் எனும் நின் அடியார் திருச்சபையில்**
**நடு இருத்திச்**
**சித்தருவின் வளர்க்கின்றாய் சிற்சபையில்**
**நடிக்கின்றார்!"**

என்ற வரிகளில், நித்திய தேகம் பெற்று இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்கள் மத்தியிலே தாம் இருப்பதாகக் கூறுகின்றார்.

இறைவனருளால் இறவா வரம் பெற்ற பின்னர் அட்டமா சித்திகள் புரியும் ஆற்றல் பெற்றிருந்தார் இராமலிங்கர். அந்த ஆற்றலையும் இறைவனே தமக்கு அளித்ததாக அவர் கூறுகின்றார்.


**"சித்தெல்லாம் வல்ல திறனளித் தெனக்கே**
**அத்தனென் றோங்கும் அருட்பெருஞ்சோதி"**

சித்திகளை 1.கரும சித்தி 2.யோக சித்தி, 3.ஞானசித்தி என மூன்று வகையாக தொகுக்கின்றார் அடிகளார். பொதுவாக, "அட்டமா சித்தி" என்பது வழக்கு, இதனை "அட்ட சித்திகளும் நினது ஏவல் செய்யும்" என்ற அருட்பா வரியில் அடிகளும் ஒப்புக் கொள்கின்றார்.

'அட்டமா சித்திகள்' என்பவை எட்டு வகையான பெருஞ்சித்திகளைக் குறிக்கும். அவை வருமாறு:

1.அனிமா : பூதவுடலை அணுப் போல் சிறியதாக்குதல்.
2. மகிமா : மேரு போன்று பெரியதாக்குதல்.
3. இலகிமா : காற்றுப் போல இலேசாக்குதல்.
4. கரிமா : பளுவாக்குதல்.
5. பிராப்தி : அனைத்தையும் ஆளுதல்.
6.வசித்தும் : எல்லோரையும் தன்வயப்படுத்துதல்.
7. பிரகாமியம் : கூடு விட்டுக் கூடு பாய்தல்.
8. ஈசத்துவம் : விரும்பியதை யெல்லாம் செய்து முடித்து அனுபவித்தல்.

சித்து புரியும் ஆற்றல் பெற்றிருந்தாரெனினும், அவற்றைச் செய்து காட்டி, மக்களுடைய பாராட்டைப் பெற முயலவில்லை. தமக்குச் சித்துகள் புரியும் ஆற்றலை தந்த சிவபெருமான் அவற்றைச் செய்ய வேண்டாமென்றும் ஆணையிட்டதாக, "அட்ட சித்திகளும் நினது ஏவல்



செய்யும்
தீயவை அவாவியிடல் என்ற ஒளியே"
என்ற வரிகளில் கூறுகின்றார். இராமலிங்க அடிகளார் அற்புதங்கள் புரியும் சித்தராயிருந்தும், அவற்றைச் செய்து காட்டி, மக்களை மயக்கிப் புகழ் பெருக்கும் விளையாட்டில் அவர் ஈடுபடவில்லை என்பதோடு, அதனை வெறுத்தார் என்றும் அறிகின்றோம்.

"அத்தா நான் வேண்டுதல் கேட்டருள்
புரிதல் வேண்டும்,
அருட்பெருஞ்சோதியைப் பெற்றே
அகங்களித்தல் வேண்டும்
திருச்சபைக்கே அடிமைகளாகச்
செய்வித்தல் வேண்டும்,"

என்று வரும் பாடல்களில், செத்தாரை எழுப்பும் சக்தியை தருமாறு ஆண்டவ்னை வேண்டியுள்ளார். பின்னர் செத்தாரை எழுப்பும் திறனைத் தாம் பெற்று விட்டதாகவும், அடிகளார் பாடியுள்ளார். இறந்தாரை எழுப்பும் வரத்தை இறைவனிடம் தாம் பெற்று விட்டதாகக் கூறுவதோடு, அது அதிசயிக்கத் தக்கதல்ல வென்றும் பாடுகிறார்.

"யான் புரிதல் வேண்டுங்கொல்
இவ்வுலகில் செத்தாரை
ஊன் பிரிந்து மீள உயிர்ப்பித்தல் – வான்
புகுந்த
அம்பலத்தான் நல்அருளால் அந்தோ நான்
மேற்போர்த்த
கம்பவத்தால் ஆகும் களித்து,"

எனும் அடிகள், இறந்தாரை எழுப்புந் திறனைத் தாம் பெற்று விட்டதாகப் பலப்பல பாடல்களில், பாடியுள்ளாராயினும் இறந்தவரைத் தாமே எழுப்பித் தருவதாக ஒரு பாடலிலும் கூறினாரில்லை. அந்தச் சித்தாடல் புரியும் உரிமை எல்லாம் வல்ல இறைவனுக்குத்தான் உண்டென்றும் கூறியுள்ளார். திறமை பெறுவது வேறு, உரிமை பெறுவது வேறு அல்லவா!

"செத்தாரை யெல்லாந் திரும்ப
எழுப்புதல் இங்கு
எத்தால் முடியுமெனில் எம்மவரே –
சித்தாம்
அருட்பெருஞ்சோதி அதனால் முடியுந்
தெருட பெருஞ் சத்திய மீதே!"

என்னும் பாடலில், செத்தாரை யெழுப்புஞ் சித்தாடல் புரியும் விருப்பம் தமக்கில்லை யென்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

தவஞ்செய்து இறைவனிடம் தாம் பெற்ற அருளை, மக்களிலே ஒவ்வொருவரும் பெற முடியுமென்று அவர் நம்பினார். அதன் விளைவாகத் தமக்கருளிய தெய்வம் எல்லாருக்கும் அருள் புரிய எழுந்தருளப் போவதாகவும் கூறினார்.

மணிவாசகப் பெருமான் மக்களைப் பார்த்து, "இறைவன் மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என்று பாடினார். தாயுமானவர், 'சேரவாரும் செகத்தீரே" என்று பாடினார். அவர்களைப் போல, வள்ளற் பெருமானும், இறையருள் பொங்கித் ததும்பிப் பூரணமாகி, ஏக உருவாய் வந்து காட்சி தரப் போவதாகக் கூறி அழைத்தார்.

"போற்றி உரைக்கின்றேன் பொய் என்
நிகழாதீர்
நாற்றிசைக்கண் வாழும் நமரங்கா
ஆற்றலருள்
அப்பன் வருகிறான் அருள்
விளையாட்டாடு தற்கென்று
இப்புவியில் இத்தருணம் இங்கு"

"இறைவர் வருவார், இறந்தாரை எல்லாம் எழுப்புவார். வாழ்வாருக்கெல்லாம் இறவாத வரந் தருவார்" என்று அடிகள் கூறியது. அவருடைய உள்ளத்தில் எழுந்த விருப்பத்தின் விளைவாகும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றார் தாயுமானவர்.

மக்களெல்லாம் சாதி சமய பேதங்களை எல்லாம் விடுத்து, வடலூர் சத்திய ஞான சபையில் நித்தமும் கூட்டு வழிபாடு நிகழ்த்த வேண்டும். ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஏழை மக்களின் பசி போக்க வேண்டும்!

தெய்வம் உண்டென்று நம்பி, அதுவும் ஒன்றென்று தெளிந்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வுடன் உலகிலுள்ளோர் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று இராமலிங்க வள்ளலார் விரும்பினார். இந்தக் கொள்கைகளுக்காகவே தோன்றி இவற்றிற்கு வெற்றி தேடவே பாடுபட்டு வந்தார்.

"அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை

**–கு.குமாரன், மன்னார்குடி.**

# உலகம் உய்ய உதித்த உடையவர்

—சென்ற இதழ் தொடர்ச்சி



எம்பெருமானாரின் மனத்தில் அவர் ஆளவந்தாருக்கு செய்து கொடுத்த சபதத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டது. எனவே, அவர் தன் சீடராகிய கூரத்தாழ்வாருடன் காஷ்மீர் நோக்கி பயணம் செய்தார். ஆளவந்தாருக்கு தான் செய்து கொடுத்த சபதமான வேதத்திற்கு உறையான "ஸ்ரீபாஷ்யத்தை" செய்தருளுவேன் என்பதை நிறைவேற்றுவதற்காக காஷ்மீரில் உள்ள சாரதா பீடத்திற்கு சென்று சாரதா பீடத்தில் உள்ள வித்வான்களை எல்லாம் வெற்றி பெற்று சாரதா தேவியையும் மகிழ்ச்சி அடையச் செய்தார்.

அதன்பின் சாரதாதேவி மகிழ்ந்து அளித்த "போதாயுந வ்ருத்தி" எனும் நூலை எடுத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் நோக்கி திரும்பினார். மேற்படி நூல் சாரதா பீடத்தில் இல்லாததைக் கண்ட வித்வான்கள் ராமானுஜரே எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்ற உறுதியில் ராமானுஜரை பின் தொடர்ந்து வந்து ஒரு மாதம் கழித்து ராமானுஜரை சந்தித்து அவரிடமிருந்து பலவந்தமாக அந்நூலை பறித்துச் சென்றனர். ராமானுஜர் மிகவும் மனம் வருந்தினார். அப்பொழுது கூரத்தாழ்வார் ராமானுஜரை நோக்கி "ஆச்சார்யரே, நீங்கள் வருந்த வேண்டாம். இரவு நேரங்களில் மேற்படி நூலை முழுவதையும் படித்து மனதில் பதித்துக் கொண்டேன். பெருமாளின் பேரருளால் மேற்படி நூலினை முழுவதுமாக மனப்பாடமாக கூற முடியும். நீங்கள் கவலைப் பட வேண்டாம் என கூறினார். ராமானுஜர் மிகவும் மகிழ்ந்து கூரத்தாழ்வார் உதவியுடன் ''ஸ்ரீபாஷ்யத்தை'' செய்து ஆளவந்தாருக்கு தான் செய்த முதல் சபதத்தை நிறைவேற்றினார்.

எம்பெருமானாரின் "ஸ்ரீபாஸ்யத்தை" சூரிய, சந்திரன் உள்ளவரையும் யாராலும் மறக்க முடியாத அளவுக்கு நிலை பெற்றது. ராமானுஜர் தன் மருமகனான "நடாதுராழ்வார்" கையிலே "ஸ்ரீபாஷ்யத்தை" கொடுத்தார். அவர் அதனை தன் தலையிலே வைத்துக் கொண்டாடினார். அதற்குப் பின், "ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத" மதத்தை நிலைநாட்ட அரங்கரின் அனுமதி பெற்று நாட்டில் பல பகுதிகளுக்கும் சென்று எம்பெருமான் குடிகொண்ட திருக்கோயில்களுக்கு சென்று "ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தை" யாரும் மறுக்க முடியாதபடி நிலை நாட்டினார்.

எம்பெருமானை ஜீவ ஆத்மா அடைய விரும்பினால் அது வெகுதாரம் ஆகும் என்றும் பகவான் ஜீவனைப் பெற நினைத்தானானால் அவனையே பற்றாகக் கொண்டு ஜீவன் எம்பெருமானை சேர்ந்திடும்

பெ.ராமநாதபிள்ளை,

தன்மையும் அருளிச் செய்தார்.

"இறைவனை உயிர்பெற எண்ணில் தூரமாம்
முறையையும் அவன்பெறின் முடுகு தன்மையும்
குறையிலான் புகில் இவன் அவனைக் கூடிடும்
துறையையும் அருள்செயத் துள்ளி ஆடியே"

– ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் – 655.

அதன் பின்னர் அரங்கனின் அருள் பெற்று பெருமை மிக்க அடியாருடன் திருக்கோஷ்டியூர் ஊருக்கு அணைந்தருளி திருக்கோஷ்டி நம்பியின் திருவடிகளை வணங்கி அங்கிருந்து திருமோகூர் என்னும் புனிதமான நகரை அடைந்தார்.

அங்கு காளமேகப் பெருமானை வழிபட்டு அதன் பின்னர் மதுரையில் உள்ள கூடல் அழகரை வணங்கி அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருப்புல்லாணி சென்றனர். திருப்புல்லாணி செந்தாமரைக் கண்ணனை வழிபட்டு, பின்னர் சேது, திருத்தலங்கள், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீவைகுண்டம், திருப்புளியங்குடி போன்ற திவ்ய தேசங்களை எல்லாம் வழிபட்டு ஆழ்வார்திருநகரி என்ற திருக்குருகூர் வந்து சேர்ந்தார்.

அவ்வாறு வரும் வழியில் அங்கே தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமிகளிடம் நம்மாழ்வார் எழுந்தருளி இருக்கும் திருக்குருகூர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று கேட்கவும், அச்சிறுமியில் ஒருத்தி அய்யரே நம்மாழ்வார் முன்பு அருளிச் செய்த உயர்ந்த பெருமையுடைய திருவாய்மொழியை திருவாய்மொழி 1000யையும் நீங்கள் ஓதியது இல்லையோ என்று கேட்கவும், ராமானுஜரும் பெண்ணே கற்றிருக்கிறேன் என்று கூறினார். உடனே அப்பெண், "கூவுதல் வருதல்" என்பதற்கு பொருள் ஒரு ''கூப்பிடும் தூரம்'' திருவாய்மொழி 9:2:10 என்பதை அறிவீரோ என்றாள்.

அதைக் கேட்டதும் ராமானுஜர் மிகவும் மகிழ்ந்து இதுவும் ஓர் பொருள் இவளிடம் இருந்து தெரிந்து கொண்டேன் என்று அவள் பாதத்தில் விழுந்து வணங்கினார்.

அதன் பின்னர் ராமானுஜர் திருகுருகூர் திருக்கோயிலை அடைந்து தாமிரபரணி ஆற்றிலே குளித்து திருமண்காப்பு சாத்தி திருத்தண்டத்தை கையில் ஏந்திக் கொண்டு நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி நாலாம் பத்து.

"ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா
அன்று நான்முகன் தன்னொடு
தேவருலகொடு உயிர் படைத்தான்
குன்றம்போல் மணியாட நீடு திருக்குருகூர் அதனுள்
நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத்
தெய்வம் நாடுதிரே!"

என்று பாடி அடியார்களோடு திருக்கோயிலுக்குள் சென்றார். பின்னர் பெருமானையும், ஸ்ரீதேவி, பூதேவியையும் வணங்கி வேதம் சொன்ன மௌன நிலையிலேயே எழுந்தருளி இருந்த நம்மாழ்வார் சந்நிதி அடைந்து "முழுமுதலே"

"சரணென வணங்கி இதயதா மரையில்
தமிழ்மறை அருளிய ஞானப்
புரணனை இருத்தி அவனை முன்னிட்டுப்
பூமகள் பொருட்டினால் அரக்கர்
முரணறுத் தோங்கிப் பொலிந்துநின்
றவனை முடிவிலா அன்பொடு புலனும்
கரணமும் கரையச் சென்றடி பணிந்தார்
கருங்கடல் அடைத்தவற் கிளையார்".

–ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 689.

சீதைக்காக அரக்கர்களின் வலிமையை ஒழித்துக் கருங்கடலில் அணை கட்டியவராகிய ராமருக்கு தம்பியான லட்சுமணன் அம்சமான உடையவர் நம்மாழ்வாரின் திருவடிகளைத் தொழுதார்.

பின்னர் அங்கிருந்து திருக்குறுங்குடி சென்றார். திருக்குறுங்குடி நம்பியை பலமுறை வணங்கினார்.

அப்பொழுது பெருமாள் ராமானுஜரைப் பார்த்து ''ஸ்ரீராமனாகவும், ஸ்ரீகிருஷ்ணனாகவும் அவதரித்து நான் செய்ய இயலாத காரியத்தை, எல்லாம் நீர் எவ்வாறு செய்தீர் என்றார்.

அதற்கு ராமானுஜர் கேட்கும் முறையில் கேட்டால் நான் கூறுவேன் என்று சொல்ல, பெருமாளும் தன் சிம்மாசனத்தை அளித்து

தான் தரையிலே நின்று கொண்டு பக்தியுடன் கேட்க ராமானுஜரும் தன் ஆட்சார்யாரும் பெரியநம்பியே சிம்மாசனத்தில் இருப்பதாகக் கூறிக் கொண்டு எட்டு எழுத்து மந்திரமாகிய "ஓம் நமோ நாராயண" என்ற மந்திரத்தின் பெருமைகளையும் நன்மைகளையும் ஓதி வந்தார்.

பெருமாளுக்கு "வைஷ்ணவ நம்பி" என்ற தாஸ்ய நாமத்தையும் அளித்தார். அகிலாண்டகோடி, பிரமாண்ட நாயகனான பெருமாள் தன் ஆட்சாரியரான ராமானுஜ ருக்கு பல மரியாதைகளைச் செய்தார். ராமனுஜர் பெருமாளை கைகூப்பி "புருஷோத்தமனே! எல்லா அபசாரங் களையும் பொருத்தருள வேண்டும்," என்று வேண்டினார் பெருமாளும் ராமானுஜருக்கு விடை கொடுக்கவும் ராமானுஜர் சேர நாடு செல்லப் புறப்பட்டார்.

அதன் பின்னர் சேர நாட்டிற்கு வந்து திருவெண்பரிசாரம் என்ற திவ்ய தேசத்தை அடைந்து அங்குள்ள திருவாழிமார்பரை வழிபட்டு பின்னர் திருவட்டாற்றில் பள்ளி கொண்ட பெருமாள் ஆகிய ஆதிகேசவப் பெருமாளை வழிபட்டு திருஅனந்துபுரம் வந்து சேர்ந்தார்.

திருவனந்தபுரத்தில் எழுந்தருளியுள்ள அனந்த பத்மநாப பெருமானையும் வணங்கி அரிய வேதங்களில் சிறந்தவராக விளங்கிய ராமானுஜர் சில நாள் அங்கு தங்கியிருந்தார். அவ்வாறு தங்கி இருக்கும் பொழுது அந்த வட்டாரத்தில் வாழும் மக்களை ஸ்ரீவைஷ்ணவர்களாக ஆக்குவதற்கு எண்ணினார்.

அவ்வாறு அவர் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது பெருமாள் அவருடைய கனவிலே எழுந்தருளி ராமானுஜரிடம் குற்றமற்ற தன்மை படைத்தவரே இவ்வூரில் உள்ளவர்களை ஸ்ரீவைஷ்ணவர்களாக்கி உயர்ந்த வைகுந்தத்தை அடைவிக்க நினைத்தாய். அவ்வெண்ணம் நன்மை பயப்பதாக இருந்தாலும் இந்த திவ்ய தேசம் ஒரு தன்மை படைத்தது என்று சொன்னார்.

**"ஆங்கவர் கனவில் மன்னி ஆசிலா**
**நிலையினானே**
**பாங்கொ(டு) இத் தலத்து ளாரைப்**
**பத்தராய்ப் பரிவில் செய்தாங்(கு)**
**ஓங்குவை குந்தத் தேற்ற நினைந்தனை**
**உறுதி யேலும்**
**தாங்குநல் குணத்தாய் இந்தத் தலமொரு**
**கோணம் கண்டாய்,"**

– ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் *693.*

மேலும் இத்திவ்ய தேசத்திலே நமக்கு தொண்டு செய்வோர்கள் இருந்தாலும் ஒரு நாள் ஒருவரும் இல்லாமல் இத்தேசம் முழுவதும் காடாகிவிடும். அதுமட்டுமின்றி வைகுண்டம் என்று உயர்வாக நம்மாழ்வார் இத்தேசத்தை பாடியுள்ளார். (திருவாய்மொழி *10.3.5*). எனவே நீர் வடக்கு திக்கிற்கு சென்று அங்கே உள்ள நாடுகளை எல்லாம் திருத்துவீராக என்று கனவிலே சொன்னார்.

**"ஒருவரும் இன்றிக் காடா முற்றஇத்**
**தலமும் அன்றிப்**
**பொருவரும் குணத்தாய் இவ்வூர்**
**புகலும்வை குண்டமென்ன**
**அருமறை விதிப்ப மாறன் அருளிய**
**படியும் கண்டாய்**
**கருதரும் இதனின் பாங்கும் கைவலி யங்க**
**ளாகும்,"**

**ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–695.**

திருவனந்தபுரத்திலே தூங்கிக் கொண்டிருந்த ராமானுஜரையும், அடியார்களையும், தன் கையால் தாங்கி திருக்குறுங்குடியில் திவ்ய தேசத்திலே விட்டு விட்டு அனந்தபத்மநாப பெருமாள் உறங்கலானார்.

காலையிலே ராமானுஜரும் அவர் அடியார்களும் விழித்த உடன் தாம் இருப்பது திருக்குறுங்குடி திவ்ய தேசம் என்று அறிந்து இது என்ன அதிசயம் என்று திகைத்து நின்றார்கள்.

உடனே ராமானுஜர் பெருமாள் கனவிலே வந்து தனக்கு தெரிவித்ததை எல்லாம் அடியார்களிடம் சொல்லி மகிழ்ந்தார். அடியார்கள் அதை அறிந்து நெருப்பில் அகப் பட்ட மெழுகு போல் உருகி நின்றார்கள். அதன் பின்னர் பெருமாளின் திருவடிகளை வணங்கி பல திவ்யதேசங்களுக்கு அடியார் களுடன் புறப்பட்டார்.

பெருமானின் கட்டளைப்படி வடக்குத் திக்கிற்கு அடைந்தார்.

–தொடரும்....

சென்ற இதழ் தொடர்ச்சி

# சாவித்திரி

சத்தியவான், ''தலைவலி போய் விட்டது; உடம்பு நல்ல நிலையிலிருக்கிறது; தாய் தந்தையரை உன் உதவியால் அடைய விரும்புகிறேன்; அகாலத்திலிருந்து ஒருபோதும் நான் ஆசிரமத்தினின்று சென்றதில்லை; மாலைக்காலம் வராமலிருக்கும் பொழுதே என்னுடைய தாய் என்னைத் தடுப்பாள்; பகலிற்கூட நான் வெளியிற் போயிருந்தால் என் தாய், தந்தையர் வருந்துவார்கள்; என் பிதா ஆசிரமத்தில் உள்ளவர்களோடு என்னைத் தேடுவார். முற்காலத்தில் மிக்க துக்கத்தை அடைந்திருக்கிற தாய் தந்தையாரால் "நீ தாமதித்து வருகிறாய்" என்று பலவாறாக நிந்திக்கப் பட்டிருக் கிறேன்; இப்பொழுதும் நம்மைப் பற்றி அவர்கள் எவ்வாறு வருந்துகிறார்களோ என்று கவலைப்படுகிறேன்.

முன்பு ஒரு காலத்தில் முதியோர்களான மாதா பிதாக்களிருவரும், இரவில் கண்களில் நீர் பெருகுகின்றவர்களும் அதிக துக்கமுள்ளவர்களும் அன்புள்ள வர்களுமாகி ''அருமைக் குழந்தாய்! உன்னை விட்டு ஒரு முகூர்த்த காலங்கூட நாங்கள் ஜீவித்திருக்க மாட்டோம்; புத்திர! நீ உயிரோடிருக்கும் வரையில் தான் நாங்கள் உயிர் வாழ்வோம். முதுமைப் பருவமுற்றுக் குருடர்களான எங்கள் இருவருக்கும் நீதான் கண்; உன்னால் நமது குலம் விருத்தியடைய வேண்டும்; எங்களிருவருக்கும் பிண்டமும் கீர்த்தியும், சந்தானமும் உன்னைச் சார்ந்திருக்கின்றன," என்று என்னைப் பார்த்துப் பலமுறை சொன்னார்கள். தாய் முதியவள்; தந்தையும் முதியவர்; அவ்விருவருக்கும் நானல்லவோ ஊன்றுகோல். அவ்விருவரும் இந்த இரவில் என்னைப் பாராமையால் எவ்வாறு வருந்துவாரோ? எந்த நித்திரையால் என்



தாயும் தந்தையும் யமுற்றார்களோ? நானும் பெரும் ஆபத்தை அடைந்தேனோ அந்த நித்திரையை வெறுக்கிறேன். தாய் தந்தையரை விட்டு நான் உயிரோடிருக்க விரும்பவில்லை. கண்ணில்லாத என் பிதா மனங்குழம்பி ஆசிரமத்திலுள்ள ஒவ்வொருவரையும் என்னைப் பற்றி விசாரிப்பார்; இது நிச்சயம்; கல்யாணி! நான் தாய் தந்தையரை கவனிப்பது போல் என்னுடைய க்ஷேமத்தையும் கூட கவனிப்பதில்லை. முன்னணி

**திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்**

தெய்வங்களாகிய என் அன்னையையும் பிதாவையும் காப்பாற்றுவதற்காகவே நான் உயிரோடிருக்கிறேன். அவர்கள் எனக்கு முக்கியமான தெய்வங்கள்; என்னால் எப்பொழுதும் வழிபடத்தக்கவர்கள்; அவர்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட இந்த பழமையான விரதமானது எப்பொழுதும் எனக்கு இருக்கிறது," என்றான்.

தர்மாத்மாவும் குரு பக்தியுள்ளவனுமான அந்த உத்தமன் இவ்வண்ணம் உரைத்து பெருந்துன்பத்தால் மூடப்பட்டவனாகி இரு கைகளையும் உயர எடுத்துக் கொண்டு உரத்த குரலுடன் அழுதான். துக்கப்பட்டு அழுகின்ற தீரனாகிய தன் கணவனைப் பார்த்துச் சாவித்ரி தன்னிரு கைளாலும் கணவனது கண்ணீரைத் துடைத்து, ''என்னால் தவமானது செய்யப்பட்டிருந்தால், என்னால் தானமும் ஓமமும் செய்யப்பட்டிருந்தால், என்னுடைய மாமியாருக்கும் மாமனாருக்கும் பதிக்கும் இந்த இரவானது நன்மையைத் தருவதாகும். விளையாட்டுக்களிலும் இதற்கு முன் பொய் சொன்னதாக எனக்கு நினைவில்லை. அந்தச் சத்தியத்தால் என் மாமியாரும் மாமனாரும் உயிரோடிருக்க வேண்டும்," என்று சொன்னாள்.

சத்தியவான், 'மாதா பிதாக்களுடைய தரிசனத்தை விரும்புகிறேன்; தாமதிக்காமல் வருவாய் என் தாய், தந்தை உயிரோடிருக்கப் பார்ப்பேனா? தாய்க்காவது தந்தைக்காவது ஏதாவது தீங்கு நேர்ந்திருக்கக் கண்டால் நான் உயிரோடிருக்க மாட்டேன். என்னைத் தொட்டு சத்தியம் பண்ணுகிறேன். உனக்கு எண்ணமிருந்தால், நான் உயிரோடிக்க விரும்பினால், எனக்குப் பிரியத்தைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் உனக்கு இருந்தால், விரைவாக ஆசிரமம் செல்வோம் புறப்படு,'' என்றான்.


உத்தமியான சாவித்திரி, பிறகு எழுந்திருந்து கூந்தலை முடிந்து கணவனை இரு கைகளாலும் தழுவித் தூக்கி நிறுத்தினாள். சத்தியவானும் எழுந்திருந்து கையினால் அங்கங்களைத் துடைத்துக் கொண்டு எல்லாத் திசைகளையும் பார்த்துப் பழக்கூடையைப் பார்த்தான்.

சாவித்திரி நாயகனை நோக்கி, "நாளை இந்தப் பழங்களைக் கொண்டு போவீர்; இந்த கோடாலியை நான் கொண்டு வருவேன்," என்று கூறி, பழம் நிறைந்த கூடையை ஒரு மரக்கிளையில் தொங்கவிட்டுக் கோடாலியை எடுத்துக் கொண்டு பதியருகில் வந்து, இடத் தோளில் பதியின் கரத்தை வைக்கும்படிச் செய்து, வலக்கரத்தால் அவனைக் கட்டிக் கொண்டு சென்றாள்.

சத்தியவான், ''பயந்தவளே! நடந்து பழக்கமிருப்பதால் எனக்கு வழி தெரிகிறது. மரங்களின் நடுவில் காணப்படுகிற நிலவினாலும் வழி தெரிகிறது; கல்யாணி! எந்த வழியாக வந்தோமோ அந்த வழியில் வந்தபடி செல்வாயாக; ஆலோசியாதே; இந்தப் பலாச மரங்களடர்ந்த தோப்பில் வழியானது இரண்டாகப் பிரிகிறது; அதற்கு வடக்கில் எந்த 'வழியிருக்கிறதோ அந்த வழியில் விரைவாகச் செல். நான் சுகமாக இருக்கிறேன்; மாதா பிதாக்களை நான் பார்க்க விரைகிறேன்,'' என்று சொல்லிக் கொண்டே பத்தினியுடன் விரைவாக ஆசிரமத்தை நோக்கிச் சென்றான்.

இதே சமயத்தில், தியுமத்சேனன் சிறந்த வன்மையும் கண் பார்வையும் பெற்று எல்லாவற்றையும் பார்த்தான்; அவன் பத்தினியாகிய சைப்பையுடன் எல்லா ஆசிரமங்களிலுஞ் சென்று புத்திரனைத் தேடி அதிகமான துக்கத்தை அடைந்தான். அந்தத் தம்பதிகளிருவரும் அந்த இரவில் ஆசிரமங்களிலும் நதிகளிலும் வனங்களிலும் தடாகங்களிலும் போய்த் தேடினார்கள். ஏதாவது சத்தத்தைக் கேட்டால் புத்திரனுடைய சத்தமோ என்கிற சந்தேகத்தால், அந்தச் சத்தமுண்டான

இடத்தை நோக்கி, "சாவித்திரியோடு சத்தியவான் வருகிறான்'' என்று பேசிக் கொண்டார்கள். தர்ப்பங்களும் முட்களும் உடம்பைக் கிழிக்க, கால்கள் தேய்ந்து உதிரமுண்டாகி வருந்த பித்துப் பிடித்தவர்களைப் போல் ஓடினார்கள். அவ்வனத்துள்ள முனிவர்கள் இவர்களது பரிதாப நிலையைக் கண்டு மனம் வருந்தி அவர்களைத் தேற்றி ஆசிரமத்தில் அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.



முனிவர்கள் அந்த மன்னனைச் சூழ்ந்து இருந்து பண்டையரசர்களுடைய ஆச்சரியமான கதைகளைச் சொல்லிச் சமாதானப்படுத்தினார்கள். வயது சென்றவர்களான அவ்விருவரும் ஆறுதலையடைவிக்கப் பட்டும் புத்திரனைப் பார்க்க வேண்டுமென்கின்ற விருப்பத்தால், அவனுடைய இளமைப் பருவந்தொட்டுள்ள அழகிய சரித்திரங்களையும், சாவித்திரியின் குணாதிசயங்களையும் ஒருவருக்கொருவர் நினைப்பூட்டிக் கொண்டு துன்பக் கடலில் மூழ்கித் தவித்தார்கள். துயரத்தால் மிகவும் வாடிய அவ்விரு முதுகுரவர்களும், ஆ! புத்ரா! எங்கே இருக்கிறாய்? ஆ! மருமகளே! ஆ பதிவிரதையே! எங்கே இருக்கிறாய்?'' என்று ஓவென்று இரக்கமாகக் கதறி கொண்டு அழுதார்கள்.

அங்கிருந்தவர்களுடன், சத்தியமான வாக்குள்ள சுவர்ச்ஸுச. ஒரு வேதியர். அவ்விருவரையும் பார்த்து, ''இந்தச் சத்தியவானுடைய மனைவியான சாவித்திரியம்மை தவமும் இந்திரிய நிக்கிரகமும் ஆசாரமுமுள்ளவர்களாக இருத்தலால், இவன் உயிரோடிருக்கிறான்,'' என்றார் கௌதமர், ''வேதங்களையும் அங்கங்களையும் ஓதியுணர்ந்திருக்கிறேன்; பெரிய தவம் செய்திருக்கிறேன்; கௌமார தசை தொடங்கிய பிரமசரிய விரதத்தை அனுஷ்டித்திருக்கிறேன். குருவையும் அக்கினியையும் திருப்தி செய்திருக்கிறேன்; மன அடக்கத்துடன் எல்லா விரதங்களையும் அனுஷ்டித்திருக்கிறேன். எப்பொழுதும் காற்றைப் புசித்துக் கொண்டு உபவாசமாக இருக்கிறேன். இவ்விதமான ஒழுக்கத்தாலும் தவத்தாலும் பிறர் செய்ய விரும்பிய எல்லாவற்றையும் நான் அறிகிறேன்; "சத்தியவான் உயிரோடிருக்கிறான்; என்ற எனது வசனத்தை உண்மையென்று அறியுங்கள்" என்றார். சீடன், எனது குருநாதருடைய வாக்கிலிருந்து வெளிப்பட்ட சொல்லின்படியே சத்தியவான் சுகமாக இருக்கிறான்; இது ஒருபோதும் பொய்யாகாது," என்று சொன்னான்.

இருடிகள், ''இந்த சத்தியவானுடைய மனைவியான சாவித்திரி சௌமங்கலத்தை உண்டு பண்ணுகின்ற எல்லா நல்லிணக்கங் களோடும் கூடியிருத்தலால் உமது மகன் ஜீவித்திருக்கிறான்," என்றார்கள்.

பாரத்துவாசர், "சாவித்திரி தேவி மகா பதிவிரதையாயிருத்தலால் இவன் உயிரோடிருக்கிறான்," என்றார்.

தால்ப்யர் ''உமக்குக் கண்கள் விளக்கமுற்றமையாலும், சாவித்திரி விரதத்தைச் செய்து ஆகாரஞ் செய்து கொள்ளாமலே கானகஞ் சென்றமையாலும், சத்தியவான் யாதொரு தீங்குமின்றிச் சுகித்திருக்கின்றான்," என்றார்.

ஆபஸ்தம்பர், "எதனால் மிருகங்களும் பறவைகளும் தெளிந்திருக்கின்ற திசையில் உமக்குப் பூமி சம்பந்தமான பெருக்கத்தைச் சொல்லுகின்றனவோ அதனால் சத்தியவான் உயிரோடிக்கிறான்," என்றார்.

கௌம்யா, ''எல்லா நற்குணங்களும் ஜனங்களுக்குப் பிரியமானவனும் நல்லிலக்கணங்களுள்ளவனுமாக இருத்தலால் உம்முடைய புத்திரன் தீர்க்காயுசுள்ளவனாக இருக்கிறான்," என்றார்.

(தொடரும்)

# அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், நாகநாதன் கோயில் (ஸ்ரீ கேது ஸ்தலம்) கீழப்பெரும்பள்ளம்

அமைவிடம்: மயிலாடுதுறை அல்லது சீர்காழியில் இருந்து பூம்புகார் செல்லும் சாலையில் தர்மகுளம் பேருந்து நிலையத்தில் இருந்து 2 கி.மீ., தொலைவில் இத்திருக் கோயில் உள்ளது. தர்மகுளம் வரை பேருந்தில் சென்று அங்கிருந்து செல்லாம். சிற்றுந்து வசதியும் உண்டு. மயிலாடுதுறையில் இருந்து வாணகிரி செல்லும் நகரப் பேருந்தில் சென்றால் கோயில் அருகிலேயே இறங்கலாம்.

**இறைவன்: அருள்மிகு நாகநாத சுவாமி.**

**இறைவி: அருள்மிகு செளந்திரநாயகி.**

**தலைவிருட்சம்: மூங்கில்.**

**தீர்த்தம்: நாகதீர்த்தம்.**

கேது பகவான்: இங்கு கேது பகவான் மேற்கு நோக்கிய தனி சன்னதியில் நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார். உடல் மனித வடிவிலும், தலை ஐந்த தலை நாக வடிவிலும் கேது பகவான் காட்சி அளிக் கிறார். இரு கைகளும் வணங்கிய நிலையில் உள்ளன.

நவக்கிரகங்களில் ஒன்பதாமவரான கேது பகவான் ஞானம், மோட்சம், தாய் வழிப் பாட்டனார், பாட்டியார், பெருந்தவம், புனித நீராடல், கட்டடத் தொழில், அயல்நாட்டில் சீவனம் கடின உழைப்பு, வைத்யன், கெட்ட சிநேகம், கல், காயம், வாயு மௌன விரதம், பாம்பாட்டி, மான், ஆடு, நாய், ஒட்டகம், கழுதை, கோழி, கோட்டான், பருந்து, பாம்பு, புழு, கொசு, மூட்டைப் பூச்சி, கரம், கால், இந்திரிய நாட்டம், மயக்கம், குன்மம், குட்டம், க்ஷயம், வலி, தோல் வியாதி, விஷக்கடி, மாந்ரீக வித்தை, சண்டி, காளி, விநாயகர், சிவபெருமான், சித்ராபுத்ரன் ஆகியோரை வழிபடுதல், கைது ஆகும் ஆணை, ஆணை ரத்து ஆதல், சாதி விட்டு நீங்குதல் ஆகியவைகளுக்குக் காரகனாய் உள்ளார்.

கேதுவுக்கு அதிதேவதை சித்ரகுப்தன், பிரத்தியதி தேவதை பிரம்மா. இராகு, கேது ஆகிய இருவருக்கும் சொந்த வீடு கிடையாது.



இருவரும் நிழல் கிரகங்கள் (சாயா கிரகங்கள்) ஆவர். இவர்கள் தாங்கள் இருக்கும் இராசிக்கு ஏற்பவும் பலன்களைத் தருவர்.

கேதுவின் திசைக்காலம் ஏழு ஆண்டுகள், கேதுவுக்கு உரிய நட்சத்திரங்கள் அசுவினி, மகம், மூலம் ஆகிய மூன்றும் ஆகும். இந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதலில் கேது திசை தொடங்கும். கேதுவிற்கு கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு என்ற பிற பெயர்களும் உண்டு. கேதுவின் அருள்பெற விநாயகரை வழிபட வேண்டும்.

**கேதுவின் வரலாறு:** கேது பிறப்பால் அசுரன் அவனுடைய இளமைப் பெயர் ஸ்வர்பானு. அவனுடைய தாத்தா காசிப முனிவர், தந்தை விப்ரசித்து. தாய் சிம்ஹிகை, சிம்ஹிகையின் மகனாதலின் அவனை சிம்ஹிகேயன் என்றும் அழைப்பர். தேவரும் அசுரரும் பாற்கடலை கடைந்து அமிர்தத்தை எடுத்தனர். மோகினி உருவில் வந்த திருமால் அமிர்தத்தை தேவர்களுக்குப் பரிமாறிக்

கொண்டிருந்தார். அப்போது அமிர்தத்தை தானும் உண்ண விரும்பிய ஸ்வர்பானு தேவ வடிவெடுத்து சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் சென்றமர்ந்து அமிர்தத்தை வாங்கி உண்டான். இதனைச் சூரியனும், சந்திரனும் மோகினிக்குச் சொன்னார்கள். மோகினி கையில் வைத்திருந்த கரண்டியால் அசுரனின் தலையில் ஓங்கி அடித்தார். அசுரனின் தலை வேறாகவும், உடல் வேறாகவும் ஆயிற்று. மனிதத் தலை, பாம்பு உடலைக் கொண்ட கருநிற இராகுவாகவும், மனித உடல் ஐந்து நாகத் தலைகளுடன் கூடிய செந்நிறமுடைய கேதுவாகவும் ஆயிற்று. பின்னர் இராகுவும், கேதுவும் தவம் செய்து கிரகப் பதவி பெற்றனர். அதற்குமுன்பு இருந்த ஏழு கிரகங்களுடன் இவர்களையும் சேர்த்து நவக்கிரகங்களாக வழிபடலாயினர். கேதுவின் நிறம் சிவப்பென்பதால், இவரைச் செந்நிற மலர்களாலும், செந்நிற ஆடைகளாலும் அலங்கரிப்பர். கலப்பு நிற ஆடைகளாலும் பல வண்ண மலர்களாலும் அணி செய்வதுண்டு. இவருக்குரிய தானியம் – கொள்ளு. சமித்து – தர்ப்பை, சுவை – புளிப்பு; ஆசனம் – கொடி வடிவமுடையது. நவரத்தினங்களில் வைடூரியம் இவருக்குரியது. இவருக்கு உச்சவீடு – விருச்சிகம். நீசவீடு –ரிஷபம். திசை– வடமேற்கு, சனியும் சுக்கிரனும் நண்பர்கள். சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகிய மூவரும் இவருக்கு பகைவர்கள். இவர் ஜைமினி கோத்திரத்தவர். கேதுவின் மனைவி பெயர் சித்ரலேகா. கேது அலிக்கிரகம். இவர் மேரு மலையை இடமாக சுற்றிவரக் கூடியவர். இராசி மண்டலத்தில் இவர் அப்பிரதட்சணமாக சுற்றுவார்.

இவருடைய சந்நிதி நாகை மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடி வட்டம், கீழப்பெரும் பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த நாகநாதன் கோயிலில் உள்ளது.

**கேதுவின் தன்மைகள்:** நவக்கிரகங்களில் கடைசி கிரகமான கேதுவின் ஆட்சிக் காலம் 7 ஆண்டுகள். இவர் ராசி மண்டலத்தில் அப்பிரதட்சிணமாக சுற்றுவார். 18 மாதங் களுக்கு ஒரு முறை கேது பெயர்ச்சி நடைபெறும்.

1. கேது தோஷத்தால் ஞானம், மோட்சம், பெருந்தவம் புனித நீராடல் ஆகியன கிட்டாமல் போகும்.

2. தாய் வழி பாட்டன், பாட்டிகளுக்கு உடல் நலக்குறைவு ஏற்படச் செய்யும்.

3. கட்டிடத் தொழில் செய்வோருக்கு தொழில் சுணக்கம் ஏற்படும்.

4. தொழில் நிமித்தம் வெளிநாடுகளில் வசிப்போருக்கு நலனையும், பலனையும் கிடைக்காமல் செய்யும்.

5.கடின உழைப்புக்கு உரிய பலனை கிடைக்காமல் செய்யும்.

6. கெட்ட சிநேகத்தை ஏற்படுத்தி அதன் மூலம் கஷ்டத்தை தரும்.

7. உடல் நலக் கேட்டினை ஏற்படுத்தி மருத்துவ செலவுகள் ஏற்படுத்தும்.

8. பதவி கிடைக்காமல் செய்தல், கிடைத்த பதவி நிலைக்காமல் செய்தல் ஆகியவற்றைக் கேது செய்வார். இதற்காக ஸ்ரீ கேது பகவானுக்கு பரிகாரங்கள் செய்தால், மேற்காணும் இடர்களை ஸ்ரீ கேது பகவான் களைந்து அருள்பாலிப்பார்.

தோஷ நிவர்த்தி: திருமண தோஷம் நீங்க, புத்திர தோஷம் நீங்க, உத்தியோக மேன்மை, தொழில் மேன்மை கிடைக்க புனித யாத்திரை கொள்ள, ஜாதகத்தில் இவருடைய வலிமை தேவை. வழக்கு நிவர்த்தியாதல், கைது ஆணை ரத்து ஆதல், பில்லி சூனிய நிவர்த் திக்கு, கடன் நிவர்த்திக்கு, கால சர்ப்பதோஷ நிவர்த்திக்கு கேது தோஷம் நீங்க பூர்வஜென்ம பாவ நிவர்த்திக்கு காரியங்கள் விக்னம் இல்லாமல் நடக்க, சகலவித

வியாதி மற்றும் பாவங்களுக்கும் நிவர்த்தி ஆக அந்நிய தேச அனுகூலம் கிட்ட வெளி நாடுகளுக்கு செல்ல வாய்ப்புகள் கிடைக்கச் செய்ய, நினைவாற்றல் மிக மேற்கண்ட பலன்கள் கிடைக்க, காரியங்கள் அனு கூலமாக கேதுபகவானுக்கு ராகு காலம் மற்றும் எமகண்ட வேளைகளில் பால் அபிஷேகம், பரிகார ஹோமம் ஆகியன செய்து கேது பகவானை வழிபட்டுப் பேறு அடையலாம்.

*திருக்கோயில் முகவரி:*

செயல் அலுவலர்,

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீகேது ஸ்தலம், கீழபெரும்பள்ளம்,
வாணகிரி அஞ்சல், தரங்கம்பாடி வட்டம்,
நாகை மாவட்டம் –609 105.

# அய்யர்மலை எனப்படும் சிவாயம்

## அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் (திருவாட்போக்கி)

கரூர் மாவட்டம் குளித்தலை வட்டத்தில் சிவாயம் அய்யர்மலை என்னும் கிராமத்தில் அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் வானோங்கி அமைந்துள்ள மலைக் கோவிலாகும். சோழ நாட்டில் அமைந்துள்ள 191 சிவத் தலங்களில் காவிரி ஆற்றுக்குத் தென்பால் 128 சிவத்தலங்களும் வடபால் 63 சிவத் தலங்களும் உள்ளன. இந்த தென் கரையில் உள்ள பாடல் பெற்ற திருக்கோவில்களில் முதலாவதாக அமைந்துள்ள சிறப்பு இத்திருத்தலத்திற்கு உண்டு.


காலையில் கடம்பர் கோயிலில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கடம்பவனேஸ்வரர் சுவாமியையும் மதியம் சொக்கர் என்று அழைக்கப்படும் அருள்மிகு ரெத்தினகிரீஸ் வரரையும் அந்தியில் திருஈங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு சிம்மபுரீஸ் வரரையும், கிரிசுரவ சக்தியுடன் வழிபடுவோருக்கு மறுபிறவி இல்லை என்று தொன்றுதொட்டு பேசப்பட்டு வருகிறது. காசிக்குச் சென்று வழிபட்ட புண்ணியம் கிடைக்கும் என்பது சான்றோர் வாக்கு

இத்திருக்கோயில் கடல் மட்டத்திற்கு 1178 அடி உயரத்தில் 1017 படிகள் கொண்ட மலையில் அமைந்துள்ளது. இந்த 1017 படிகளில் கிரிசுரவ சுத்தியுடன் விரதமிருந்து உடலை வருத்தி வழிபட்டால் எல்லா நலமும் எல்லா வளமும் கிடைக்கும் என்பதை வலியுறுத்தி

நாடி வந்து நமக்தமர் நல்லிருள்
கூடி வந்து அமைப்பதன் முன்னமே
ஆடல் பாட லுகத்த வாட்போக்கியை
வாடி ஏந்தநம் வாட்டந் தவிரும்மே

என்ற பாடலால் திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளி உள்ளார். இம்மலையில் பதினெட்டாம் படி மிகுந்த சிறப்பு வாய்ந்தது. மனச்சாட்சிப்படி நடக்காதவர்க்கும் வாக்கு தவறியவர்க்கும் பாதிக்கப்பட்டவர்கள் இறைவனை வழிபட்டுப் பதினெட்டாம் படியில் சத்தியம் செய்தால் அதற்குண்டான பலன் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

இம்மலையடிவாரத்தில் உள்ள கம்பத்தடியில் கட்டுக் கட்டினால் பில்லி, சூனியம், ஏவல் முதலியவை நீங்கி நலம் கிட்டிடும் என்பது தொன்று தொட்டு இன்றும் நம்பப்படுகிறது. திருவண்ணாமலையில் ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் இறையன்பர்கள் கிரிவலம் வந்து இறைப் பயன் பெறுவது போன்று இங்கும் பௌர்ணமி மற்றும் இதர நாட்கள் திரளாக கிரிவலம் வந்து துன்பம் இல்லா இன்பப் பெருவாழ்வை பெற்று



வருகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

**தலமும் இருப்பிடமும்**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்தில் காவிரியாற்றுக்குத் தென்கரையில் இனாம் சத்தியமங்கலத்தை சேர்ந்தது இத்தலம். திருச்சிராப்பள்ளி ஈரோடு இருப்புப் பாதையில் குளித்தலை நிலையத்திலிருந்து 8 கி.மீ., தூரம் திருச்சிராப்பள்ளி மதுரை இருப்புப் பாதையில் மணப்பாறை நிலையத்திலிருந்து 40 கி.மீ., தொலைவு. குளித்தலை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மணப்பாறை, துறையூர், சேலம், நாமக்கல், மதுரை முதலிய இடங்களில் இருந்து இவ்வூர் வழியாகப் பேருந்துகள் செல்கின்றன.

**தலப் பெருமைகள்**


மக்களால் பொதுவாக இத்தலத்திற்கு வழங்கப்படும் பெயர் ஐயர் மலை என்பதே. இவ்வூரிலுள்ள கோயிலை வழிபட புதிதாகச் செல்பவர்கள் ஐயர்மலை என்று கேட்டால் தான் தெரியும். இம்மலைக்கு சிவாய மலை, ரத்தினகிரி, ரத்தினாசலம், ஐயர் மலை, மணிகிரி, வாட்போக்கி முதலிய பெயர்கள் வழங்குகின்றன.

சிறந்த சிவன் கோயில் அமைந்திருக்கும் சிவாயம் என்னும் சிற்றூருக்கருகே இம்மலை இருப்பதால் சிவாயமலை என்று பெயர் பெற்றது. மலை ஏறி செல்லும் படி வழியும், மலை மேற்கோயிலிலுள்ள பிரகாரங்களும் ஓம் என்ற பிரணவ எழுத்து போலவும் சிவ மகா மந்திரமான ஐந்தெழுத்தின் வடிவமாகவும் அமைந்திருத்தலால் சிவாயமலை என்று பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

நவரத்தினங்களுள் ஒன்றான மாணிக்கம் போன்று விளங்குவதால் மாணிக்கமலை என்று பெயர் ஏற்பட்டது. மலையின் தோற்றத்தைக் காணும்போது ''மலையிற் சிறந்தது மாணிக்கமலையே'' என்று போற்றவும் தோன்றுகிறது.

மதுரையில் சொக்கலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிரகம் சுற்றிலும் எட்டு யானைகள் தாங்கும்படியாக இந்திரனால் அமைக்கப்பட்டதை அட்டகிரி விமானம் என்பர். அதேபோல் சுற்றிலும் எட்டு பாறைகளுக்கு நடுவே உள்ள ஒன்பதாவது பாறையில் சிவபெருமான் சுயம்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் காரணத்தால் இந்த மலையை மாணிக்கமலை என்றும் கூறுகின்றனர்.

ஒன்பது பாறைகளும் நவரத்தினங்களைக் குறிக்கும். மலைக் கோயில் பிரகாரங்களைச் சுற்றி வரும்போது இப்பாறைகளைக் காணலாம். யாவருக்கும் மேலாகிய தலைவர் (ஐயர்) இங்கு



கோயில் கொண்டிருப்பதால் ஐயர் மலை என்ற பெயர் எழுந்தது. பஞ்ச பாண்டவர் வனவாசத்தின்போது இங்கு தங்கி இருந்தனர் என்றும், அதனால் இம்மலைக்கு ஐவர் மலை என்ற பெயர் உண்டாயிற்று என்றும் அப்பெயரே நாளடைவில் திரிந்து ஐயர் மலை என்றாயிற்று என்றும் சொல்கின்றனர்.

இதற்கு ஆதாரமாக மலைப் பாறையில் ஐந்து படுக்கைகள் செதுக்கி இருப்பதையும் காட்டுகின்றனர். எனவே ஐவர் (பஞ்சபாண்டவர்) மலை என்பது ஐயர் மலை என்றாயிற்று என்று கூறுவாரும் உளர். சமண முனிவர்கள் தமிழ்நாட்டில் பல குன்றுகளில் தங்கி இருப்பதற்காகக் கற்பாறைகளில் படுக்கைகள் அமைத்துக் கொண்டனர் என்பது வரலாறு அறிந்ததொன்று.

இம்மலைப் பாறையிலும் அக்காலத்தில் பன்னத்துறைவேசன் என்னும் சமண முனிவர் இங்கு வாழ்ந்து வந்த கல்வெட்டு வரலாறு குகையில் உள்ளது. ஆரிய மன்னன் ஒருவனுக்கு இறைவன் இரத்தினமுடி கொடுத்தருளிய காரணத்தால் இரத்தினகிரி. இரத்தினாசலம், மணிகிரி என்ற பெயர்கள் உண்டாயின்.

**கோயில் அமைப்பு**

இயற்கை வனப்புடன் இலங்கும் இரத்தினகிரி என்ற இம்மலையடிவாரத்தில் முதலில் தென்படுவது நான்கு புறங்களிலும் படிகளை உடைய திருக்குளம். மலைக்குக் கிழக்குப் பக்கத்தில் இருந்து தான் மேலே ஏறிச் செல்ல வேண்டும். முதலில் நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. அதன் முகப்பில் பிரதான விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

அம்மண்டபத்திற்குள்ளேயே வைரப் பெருமாள், கருப்பண்ணசாமி, கோடங்கி நாயக்கன், தண்டபாணி சந்நிதிகள் இருக்கின்றன.

தண்டபாணி சந்நிதிக்கு இருபுறமும் விஸ்வநாதர் – விசாலாட்சி சந்நிதிகள் உள்ளன.

அதற்கு முன்புறத்தில் வலப்புறத்தே அருணகிரிநாதர் சந்நிதி இருக்கிறது. இடப்புறத்தே வடலூர் ராமலிங்க அடிகளுக்குச் சிறுகோவில் கட்டப் பெற்றிருக்கிறது. அம்மண்டபத்திற்கு உள்ளேயே மலைப் பாதைக்கு அண்மையில் மற்றொரு விநாயகர் சந்நிதியும் இருக்கிறது.

கொஞ்ச தூரம் மலை மீது நடந்து சென்றால் செல்லுகிறவர்களுக்கு இடப் பக்கமாக சகுனக் குன்று என்ற உருண்டையான பாறை அடிப்பாகம் சிறுத்து மலையில் ஒட்டிக் கொண்டு இருப்பது போன்றும், நம்மீது உருண்டு விழுந்து விடுமோ என்று தோன்றும் வண்ணமும் இருக்கிறது.

அதற்கு எதிரில் நால்வர் சந்நிதியிருக்கின்றது. மூன்று அறைகளில் நடுவில் உள்ளதில் அப்பரும், சம்பந்தரும், மற்ற இரு அறைகளில் சுந்தரரும், மாணிக்கவாசகரும் எழுந்தருளியிருக்கின்றனர். மிக்க அழகான திருவுருவங்கள். அதற்கு சற்று மேலே பொன்னிடும் பாறை இருக்கின்றது. அங்கும் ஒரு விநாயகர் கோயில் உண்டு. இன்னும் மேலே 103 படிகள் ஏறிச் சென்றால் பதினெட்டாம் படி உள்ளது.

கீழிருந்து மேலே போகும் படி வழியில் ஆங்காங்கே 21 மண்டபங்கள் இருக்கின்றன. இதை விட்டு மேலே சற்று போனதும் இடது பக்கம் பிளவுபட்ட இரண்டு செங்குத்தான பாறைகள் நிற்கின்றன. இவ்விரண்டையும் ஒன்றாக சேர்த்தால் நன்றாக பொருந்தி விடுவது போல் இருப்பது மிக்க வியப்பானது இவற்றைப் பாறைச் சகோதரிகள் என்று அழைக்கலாம் போலும். இந்த பிளவுக்கிடையே சப்த கன்னியரின் ஏழு உருவங்களும், ஒரு காளி உருவமும், விநாயகர் உருவமும் காணப்படுகின்றன. அதற்கு மேல் படி வழியில் உகந்தான்படி விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது. அங்கிருந்து மலை மேல் ஏற ஒரு வாயில் மண்டபம் இருக்கிறது.

அவ்வாயிலின் வழியே படி ஏறிச் சென்றால் முதலில் சோழபுரீசர் கோயில் காணப்படுகிறது. அதில் சிவலிங்க மூர்த்தி எழுந்தருளியுள்ளார். அதற்குப் பக்கமாக மேடையில் பெரிய வேப்பமரம் இருக்கிறது. இதுவே இத்தல விருட்சம். சோழபுரீசர் கோயிலுக்குப் பின்புறம் அம்பிகையின் திருக்கோயில் ஒரே பிரகாரம் இருக்கிறது. அம்பாள் அழகிய உருவம், தேவிக் கோயிலிலிருந்து பத்துப் படிகள் ஏறியதும் ஒரு வாயில் வழியாக கம்பத்தடி மண்டபம் என்னும் விசாலமான மண்டபத்திற்குள் நுழைகின்றோம். இதன் நடுவே நந்தியும் கொடிக் கம்பமும் உள்ளன. தென்புறம் மேல்புறங்களில் அறுபத்தி மூன்று நாயன்மார்கள் எழுந்தருளியுள்ளனர்.

இக்கோயிலில் கீழே ஒரு பிரகாரமும், மேலே ஒரு பிரகாரமும் இருக்கின்றன. கம்பத்தடி மண்டபத்தில் இருந்துதான் கீழ் பிரகாரத்தை வலம் வந்து 60 படிகள் ஏறிச் சென்றால் மேல் பிரகாரத்தையுடைய தெற்குப் பக்கத்தில் கோபுர வாயில் அமைந்திருக்கின்றது. சுவாமி மேற்கு சந்நிதி, மேற்கு நோக்கி இருந்தபோதிலும் இந்த தெற்கு வாயில் வழியாகத் தான் கோயிலுக்குள் நுழைய வேண்டும்.

இந்த வாயிலுக்கு வெளியே உயரிய மணி மண்டபம் இருக்கிறது. பூசை நேரங்களில் இங்கிருந்து மணி ஓசை எழுப்பப்படுகிறது. தெற்கு திருவாயில் நுழைந்ததும் எதிரே தட்சிணாமூர்த்தி காட்சியளிக்கிறார்.

பிறகு மேற்கே திரும்பினால் அங்கு ஒரு வாயில் இருக்கிறது. இருமருங்கும் திருவாயில் இருபாலர் (துவாரபாலகர்) உள்ளனர். வலதுபுறம் கணபதியும், இடபுறம் தண்டபாணியும் எழுந்தருளியுள்ளனர். நேரே சென்றால் வைர பெருமாள் சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது. அங்கிருந்த மகா மண்டபத்துள் நுழைய தென்புறம் ஒரு வாயில். அந்த மண்டபத்தின் நடுவே நந்தி எம்பெருமானும் தென்மேற்கு மூலையில் நர்த்தன விநாயகரும் எழுந்தருளியிருக்கின்றனர். சுவாமி சந்நிதிக்கு நேர் சுவரில் ஒன்பது துவாரங்களை உடைய பலகணி இருக்கிறது. பித்தளையினால் செய்யப் பெற்ற இரண்டு விளக்கு நாச்சியார் உருவங்கள் உள்ளன. இந்த மண்டபத்தில் இருந்து உள்மண்டபத்திற்குப் போக துவார பாலகர் உள்ள மேற்கு நோக்கிய வாயில் இருக்கிறது. இந்த உள் மண்டபத்தில் சிலாவிலான நந்தி ஒன்றும், செம்பினால் செய்யப் பெற்ற நந்தி ஒன்றும் உள்ளன.

உள்ளே கருவறையில் நேரே இரத்தினகிரீசர் காட்சி தந்தருளுகிறார். அப்பெருமான் சுயம்புலிங்க மூர்த்தி (தானாகத் தோன்றியவர்) அவரை வழிபட்ட பின் வடக்குத் திருவாயில் வழியாகப் பிரகாரத்திற்கு வந்தால் கிழக்கு நோக்கி விசுவநாதர் –விசாலாட்சி, வள்ளி தெய்வானையுடன் அறுமுகப் பெருமான்,

தெற்கு நோக்கி நடராசர் – சிவகாமி மற்ற உற்சவ மூர்த்திகள் எல்லாம் எழுந்தருளியுள்ளனர். கர்ப்பகிரகத்தின் தென்கோட்டங்களில் ஆரிய மன்னனும், துர்க்கையும், கிழக்கு கோட்டத்தில் அர்த்தநாரீசுவரரும் காட்சி தருகின்றனர். வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரரும், வடமேற்கு மூலையில் பைரவரும்

எழுந்தருளியுள்ளனர். கிழக்கு பிரகாரத்தில் சூரியன், நவக்கிரகம், சந்திரன் இவர்களின் சந்நிதிகள் இருக்கின்றன.

**மூர்த்திகள்**


இத்தலத்து மூர்த்தியின் கீர்த்தியைப் பற்றிச் சொல்லவும் அரிது. இரத்தினகிரியில் எழுந்தருளியிருப்பதால் இரத்தினகிரீசுவரர் என்றும், ஆரிய மன்னன் சினங்கொண்டு வீசிய வாளைப் போக்கியபடியால் வாட்போக்கிநாதர் எனவும், ஆரிய அரசனால் வழிபடப் பெற்றமையால் இராசலிங்கர் எனவும், அம்மன்னன் வாளால் வெட்டிய தழும்பு முடிமேல் இருப்பதால் முடித்தழும்பர் என்றும், மலையுச்சியில் கொழுந்தாகக் காட்சியளிப்பதால் மலைக்கொழுந்தீசர் என்றும், பேரழகுடன் விளங்கும் பெற்றியால் சுந்தரர் என்றும் அகத்தியர் மத்தியானத்தில் வழிபட்டு பேறு பெற்றமையால் மத்தியானச் சொக்கர் என்றும் திருநாமங்கள் ஏற்படலாயின.

சுற்றுப்புற ஊர்களில் உள்ள மக்கள் இரத்தினம் என்பதைச் சேர்த்து இராசரத்தினம், சேதுரத்தினம், இராமரத்தினம், நாகரத்தினம், அரங்கரத்தினம் என்ற பெயர்களிட்டு வழங்கி வருகின்றனர்.

திருமலைக்கொழுந்து என்ற பெயரும் காணப்படுகிறது. அண்ணாமலை, அருணாசலம் என்று தலத்தின் பெயரையே மக்களுக்குச் சூட்டியிருப்பது போல் இந்தப் பக்கத்திலும் இரத்தினாசலம் என்ற பெயருடையவர்களும் இருக்கின்றனர். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகைக்கு அரலட்சேசுவரி, அராள கேசாம்பிகை, கரும்பர் குழலி, (வண்டு மொய்க்கும் கூந்தலையுடைவள்) என்ற திருநாமங்கள் உள்ளன.

**தல மகிமை**

சித்திரை மாதத்தில் சூரிய கிரகணங்கள் சுவாமி சந்நிதிக்கு நேரேயுள்ள நவத் துவாரங்களின் வழியாக சிவலிங்கத்தின் மேல் விழுகின்றன. இம்மலையிலுள்ள பாம்புகள் தீண்டினால் விஷம் ஏறுவதில்லை. வறட்சி காலங்களில் சகுனக் குன்று விநாயகருக்கு பூஜை செய்தால் மழை பெய்கிறது. உள்ளூர் வெளியூர்களில் உள்ள பல வகுப்பினரும் இம்மலைமேற் பெருமானைக் குல தெய்வமாகக் கொண்டாடி வழிபடுகின்றனர். ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவில் திருவிழாவன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி வழிபடுகின்றனர். திருத்தேர் மலையைச் சுற்றி வலம் வருவதை இவ்வட்டாரத்தினர் பக்திப் பரவசத்துடன் கண்டு களிக்கின்றனர். திருநாவுக்கரசர் தேவாரம் பாடி அருளிய பெருமை உடையது. அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார். புராணம், கலம்பகம், உலா, வெண்பா, அந்தாதி முதலிய பிரபந்தங்கள் இத்தலத்தைப் பற்றி எழுந்துள்ளன. சோழ, பாண்டிய, ஒய்சள, விசய நகர மன்னர்கள் பல மானியங்கள் வழங்கி பூஜை, விழா, திருப்பணி முதலியன நடத்த ஏற்பாடுகள் செய்ததை இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இத்தலத்தின் பெருமைகள் சொல்லுந்தரத்ததோ!



**தினசரிப் பூஜை!**


மலைக்கோயிலில் நாள்தோறும் காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் பூஜை நடைபெறுகிறது. காலைச் சந்தி 10.30 மணிக்கும், உச்சிகாலம் 12.01 மணிக்கும், சாயரட்சை மாலை 5 மணிக்கும் நடக்கின்றன.

**அய்யர் மலை செல்வோமே!**
**அய்யனை வழிபடுவோமே!!**


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13

ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86
தொலைபேசி: 23450920/28117575



குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள், கொடிமரம்,பிரபை,
பத்தரை மாத்து தங்கத்தில் பளப்பளக்க செய்வோம்
Thejus
24-Ct Gold Platings
94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370. 94440 00060 email: divyasid@gmail.com www.thejus.com

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11



அண்ணாமலை எம் அண்ணா போற்றி!
கண்ணார் அமுத கடலே போற்றி!!

தென்னாடுடைய சிவனே போற்றி!
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி!!

உ

**அருள்மிகு அண்ணாமலையார் துணை**

அண்ணாமலை எம் அண்ணா போற்றி!
கண்ணார் அமுத கடலே போற்றி!!

அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருஅண்ணாமலை,

# திருக்கார்த்திகை தீபத் திருவிழா

2009ம் ஆண்டு அழைப்பிதழ்

பஞ்சபூதத் தலங்களில் அக்னித் தலமான இத்திருக்கோயிலின் திருக்கார்த்திகை தீபத்திருவிழா இவ்வாண்டு 19-11-2009 முதல் 5-12-2009 முடிய கீழ்க்கண்ட விபரப்படி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

**திருக்கார்த்திகை பிரம்மோற்சவ விபரம்**

(1419-ஆம் பசலி - 2009-ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்கள்)

| எண் | ஆங்கில தேதி | தமிழ்வருடம் மாதம் | தேதி | நாள் | விழா விவரம் | உற்சவம்-வாகனங்கள் விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 19-11-2009 | திருவள்ளுவராண்டு 2040 விரோதி ஆண்டு கார்த்திகை திங்கள் | கார்த்திகை 3 | வியாழன் | | ஸ்ரீ துர்க்கை அம்மன் உற்சவம் |
| 2. | 20-11-2009 | | 4 | வெள்ளி | | ஸ்ரீ பிடாரி அம்மன் உற்சவம் |
| 3. | 21-11-2009 | | 5 | சனி | | ஸ்ரீ விநாயகர் உற்சவம் |
| 4. | 22-11-2009 | | 6 | ஞாயிறு | 1 | துவஜாரோகணம் (காலை 4.15மணிக்குமேல் 5.45 மணிக்குள்) |
| 5. | 23-11-2009 | | 7 | திங்கள் | 2 | வெள்ளி இந்திர விமானம் |
| 6 . | 24-11-2009 | | 8 | செவ்வாய் | 3 | சிம்ம வாகனம், வெள்ளி அன்ன வாகனம் |
| 7. | 25-11-2009 | | 9 | புதன் | 4 | வெள்ளி கற்பக விருஷம், காமதேனு வாகனம் |
| 8. | 26-11-2009 | | 10 | வியாழன் | 5 | வெள்ளி ரிஷப வாகனம் |
| 9. | 27-11-2009 | | 11 | வெள்ளி | 6 | வெள்ளி ரதம் |
| 10 | 28-11-2009 | | 12 | சனி | 7 | மகாரதம் (காலை 7.00 மணிக்குமேல் 8.00மணிக்குள் வடம் பிடித்தல் |
| 11. | 29-11-2009 | | 13 | ஞாயிறு | 8 | மாலை 4.00 மணிக்கு ஸ்ரீபிக்ஷாண்டவர் உற்சவம், இரவு குதிரை வாகனம் |
| 12. | 30-11-2009 | | 14 | திங்கள் | 9 | கைலாச வாகனம், காமதேனு வாகனம் |
| 13. | 01-12-2009 | | 15 | செவ்வாய் | 10 | காலை 4.00 மணிக்கு பரணி தீபம் மாலை 6.00மணிக்கு மகா தீபம் |
| 14. | 02-12-2009 | | 16 | புதன் | | இரவு ஸ்ரீ சந்திரசேகரர் தெப்பல் உற்சவம் ஸ்ரீ பெரிய நாயகர் கிரிபிரதக்ஷணம் |
| 15. | 03-12-2009 | | 17 | வியாழன் | | இரவு ஸ்ரீ பராசக்தி அம்மன் தெப்பல் உற்சவம் |
| 16. | 04-12-2009 | | 18 | வெள்ளி | | இரவு ஸ்ரீ சுப்பிரமணியர் தெப்பல்உற்சவம் |
| 17. | 05-12-2009 | | 19 | சனி | | ஸ்ரீ சண்டிகேசுவரர் உற்சவம் |

**மா.புகழேந்திரன்**, பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்.

**வ.தனுசு**,எம்.எஸ்சி.,
அறங்காவலர் குழுத் தலைவர்.

அறங்காவலர்கள்:
**பெ.கோவிந்தன்,**
**க.மணிவர்மா,** முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
திருமதி. **அ. பானுமதிஅருணகிரி**
**இர.சீனிவாசன்.**